// தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௮௮ | மலர் |
|---|---|---|
| ௩௩ | ஏவிளம்பி, ஆவணி<br>1957 ஆகஸ்டு, செப்டம்பர். | ரு |


## பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் இராசேந்திரன் செப்பேடுகளின் கிரந்தப் பகுதியின் தொடர்ச்சி இவ்விதழை அணி செய்கின்றது. மொழி பெயர்த்தவர் — தஞ்சை, சரசுவதி மகாலில் வடமொழி ஆராய்ச்சியாளராக இருந்துவரும் சிரோமணி, நாவல்பாக்கம் திரு. தேவநாதாச்சாரியாராவார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை ஆராய்ச்சியாளர், திரு. T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள் இப் பகுதிக்கும் குறிப்புரையும் விளக்கமும் தந்துள்ளனர்.

---

### கையறவு.

கரந்தைத் தமிழ்ச் சங்க உறுப்பினரும், பொதுநலத் தொண்டருமான திருச்சிராப்பள்ளி திருவாளர் ரெ. விசுவநாதம் பிள்ளை அவர்கள் (ஓய்வு பெற்ற துணைப் பொறிவலாளர்) 21—7—57-ல் இயற்கை எய்தியமை கேட்டுப் பெரிதும் இரங்கி அன்னாரின் குடும்பத்தாருக்குச் சங்கம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

# கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் இராசேந்திர சோழன் செப்பேடுகள்.

[சென்ற இதழின் தொடர்ச்சி]

43. இராசராசன் பூமியை அனுபவித்து விட்டுச் சொர்க்கத்தைச் சுகமாக அனுபவிப்பதற்குச் சென்றபொழுது, குணங்களாகிய இரத்தினக் குவியல்களுக்குக் கடல்போன்றவனான தைரியம் நிறைந்த இந்த மதுராந்தகன் பூமியின் பாரத்தைத் தாங்கினான்.

44. பத்மராகக் கல்லினுடைய ஒளியினால் விளங்குகிற பொற் கிரீடத்தைத் தலையால் தாங்கிய அவன் உயர்ந்த தனது சிகரத்தினால் காலை வேளையில் சூரிய மண்டலத்தைத் தாங்கி நிற்கும் உதய பர்வதம்போல் விளங்கினான்.

45. கதிரவன்போல் செயல்புரியும் மதுராந்தகன் என்னும் அரசன் பெரிய புயத்தினால் பூமியின் பாரத்தைத் தாங்கும்பொழுது, இவ்வுலகம் கலி என்னும் இராகுவினுடைய முகப் பாழியினின்றும் வெளிப்பட்ட சந்திரமண்டலம்போல் விளங்கிற்று.

46. (மதுராந்தகன்) அரசன் பூமியை ஆளும்பொழுது மக்கள் அறவழியில் கருத்துள்ளவர்களாகவும், தமது கடமைகளில் ஊன்றியவர்களாகவும் துன்பங்களை அற்றவர்களாகவும், நிலைத்த செல்வம் விழா இவைகள் நிறைந்தவர்களாகவும், மிக்க மகிழ்ச்சி உள்ளவர்களாகவும், உண்மையைப் பற்றுபவர்களாகவும், நல்வாழ்க்கையுடையவராகவும் இருந்தனர். காலத்தில் மழை பொழிந்தது. ஆறுகள் நன்னீரோடு பெருகின. எல்லாப்பக்கங்களிலும் நாடு (பூமி) பல்வேறு பயிர் வகைகளால் அழகு செய்யப் பெற்றிருந்தது.

47. அறமாகிய உதய பர்வதத்தில், நாளும் உதயத்தையடைந்து உலகத்திலுள்ள யாவராலும் வணங்கப்படுபவனும். அனேகமாயிரம் (பூபிர்த்) அரசர்களுடைய மாசற்ற மணிகளால் விளங்கும் தலைகளில் தனது பாதங்களை வைத்தவனும், தீவிரமான பிரதாபத்தை உடையவனும், தனது கரங்களால் எல்லா உலகுக்கும் உபகாரம் செய்பவனும் சன்மார்க்கத்திலேயே இருப்பவனுமான அப்படிப்பட்ட இவ்வரசன், சூரியன்போல் தனது சேர்க்கையினாலும் மரபினாலும் உலகத்தை ஒளியோடு விளங்கச் செய்தான்.

48. காம்போஜ தேசத்தரசன் வெற்றியே தருவதான எந்த தனது தேரினால் பகைவர்களுடைய சேனையை வென்றானோ அந்தத்தேரை, வெற்றி வீரனான எவனுடைய உதவியினால் போர்களில் பகைவர்களுடைய படையை வென்றானோ, அந்த மதுராந்தகனுடைய நட்பை

---

47. இச் சுலோகம்—கதிரவனுக்கும் மதுராந்தகனுக்கும் சிலேடை.

பூபிர்த்—மலை + அரசன். பாதம்—கிரணம்—கால்கள். பிரதாபம்—சூடு—பராக்கிரமம். கரம்—கிரணம்—கை. சது—விண்மீன்—நல்லோர்கள். முகர்த்தா—சிகரம்—தலை.

48. மதுராந்தகன் என்ற பெயரோடு இளமையில் விளங்கிய முதல் இராசேந்திர சோழன் தனக்குச் செய்த பேருதவியின் பொருட்டுத் தன் நன்றியறிதல் காரணமாகக் காம்போச மன்னன் அவனுக்குத் தேர் அளித்தது இச் செப்பேட்டில் காணப்படும்

வேண்டித் தனது ஆட்சித் திருமகளைக் காப்பதற்காக, அவனுக்குக் கொடுத்தான்.

49. சிறந்த அறிவாளியான சக்கரக்கோட்டத்து அரசனும், இணையற்ற ஆற்றல் பொருந்திய மதுராந்தகனை, தன்னால் அனுப்பப்பட்டவையும், எண்ணற்றவையும், புதிய மேகம் போன்றவையும், மலைகளில் திரிபவையும், அபிஷேகத்திற்கு ஏற்றவையுமான 'பத்ரம்' என்னும் இனத்தைச் சார்ந்த யானைகளால் மகிழ்வித்துப் பெருஞ் செல்வத்தைப் பெற்றான்.

50. அவனுடைய (மதுராந்தகனுடைய) ஆணையை மற்ற அரசர்கள் யாவரும் அச்சத்தினால் தலைமேல் தாங்கி நின்றனர் என்பதில் வியக்கத்தக்கது ஒன்றில்லை. ஏனெனில் அவனுடைய ஆணையை இன்றளவும் மகேந்திரமலை தன் சிகரத்தினால் தாங்கிக் கொண்டிருக்கிறதல்லவா ?

51. 'மானகேடத்தை நான் பிடிக்காத வரையில் க்ரிஹா விகாரம் செய்வதில்லை' என்னும் தந்தையினுடைய (இராசராசன்) சூளுரையை நிறைவேற்றிவைப்பதற்காக அரசன் (மதுராந்தகன்) அப்பட்டணத்தைப் பிடிப்பதில் ஆவல் கொண்டான்.

---

அரியதோர் புதிய செய்தியாகும். இந்நாளில் தாய்லண்டு என்று கூறப்படும் சயாம் தேசத்திற்குக் கிழக்கேயுள்ளதும் இக்காலத்தில் கம்போடியா என்று வழங்கப்பெற்று வருவதுமாகிய நாடே முற்காலத்தில் காம்போசம் என்னும் பெயருடையதாயிருந்தது. இந்நாட்டு வேந்தன், தன் ஆட்சியை இராசேந்திர சோழன் துணைகொண்டே நடத்த வேண்டிய நிலையிலிருந்தமையால் சோழ மன்னற்குத் தேரளித்து அவனது உறுதியான நட்பைப் பெறுவது இன்றியமையாததாயிற்று என்பது இச்சுலோகத்தினால் நன்கறியக்கிடக்கின்றது.

49. சக்கரக்கோட்டம் என்பது மத்திய மாகாணத்திலுள்ள வத்ச இராச்சியத்தில் உள்ளது. 'பஸ்டர் ஸ்டேட்' (Bastar State) என்று இப்போது வழங்கும்நாடே பழைய வத்சஇராச்சியம் ஆகும் சக்கரக்கோட்டம் 'சித்ரக்கூட்' (Chitrakut) என்று இந்நாளில் வழங்குகிறது, இது, ஜகதால்பூர் என்ற இக்காலத்துத் தலைநகர்க்கு 25 மைல் தூரத்திலுள்ளது, இச் சக்கரக்கோட்டத்திற்கு அண்மையிலுள்ள வயிராகரம் என்ற ஊரில் யானைகளும் வயிரச் சுரங்கங்களும் முற்காலத்தில் மிகுதியாக இருந்தன என்று 'அயினி—அக்பரி' என்ற நூல் கூறுகின்றது. எனவே, சக்கரக்கோட்டத்தரசன், இராசேந்திர சோழனுக்குப் பட்டத்துக்குரிய 'பத்ரம்' என்ற இனத்தைச் சேர்ந்த யானைகள் அளித்து மகிழ்வித்தான் என்று இச்சுலோகம் கூறுவது உறுதியாதல் காணலாம். சளுக்கியருடைய பட்டத்து யானைகள் கரபத்திரன் மூலபத்திரன் என்ற பெயருடையன என்பது இரண்டாம் இராசேந்திர சோழன் மெய்க்கீர்த்தியால் அறியக்கிடத்தல் ஈண்டுக்குறிப்பிடத்தக்க தொன்றும்,

50, மகேந்திரமலை என்பது தஞ்சம் ஜில்லாவிலுள்ள ஒரு மலை. இம்மலையின் மேலுள்ள கோகர்ணேசுவரர் திருக்கோயிலில் முதல் இராசேந்திர சோழனுடைய தமிழ்க் கல்வெட்டு ஒன்றும் தெலுங்கெழுத்தில் அமைந்த வடமொழிக் கல்வெட்டு ஒன்றும் இருக்கின்றன. அவை, இராசேந்திர சோழன் விமலாதித்தன் என்ற குலூதவேந்தனைப் போரில் வென்று அவன்பால் பல யானைகளைத் திறைப்பொருளாகப் பெற்றுக்கொண்டமையோடு அம்மலையில் வெற்றித்தூண் ஒன்று நிறுவினான் என்றும் கூறுகின்றன. (S.I. I, Vol. V, Nos 1351 and 1352) தமிழ்க் கல்வெட்டில் இராசேந்திர சோழப் பல்லவராயன், இராசராசமாராயன் என்ற சோழர் படைத் தலைவர் இருவர் பெயர்கள் வரையப்பட்டிருத்தல் அறியத்தக்கது. இக் கல்வெட்டுக் களின்கீழ் ஒரு புலியும் இரண்டு கயல் மீன்களும் பொறிக்கப்பட்டிருத்தல் குறிப்பிடத் தக்கதொன்றும், சைவ சமயகுரவருள் ஒருவராகிய மணிவாசகப்பெருமான் தம் கீர்த்தித் திருவகவலில் "மன்னுமாமலை மகேந்திரமதனிற்—சொன்ன ஆகமந் தோற்றுவித்தருளியும்" என்று இம்மகேந்திரமலையையும் இதில் சிவபெருமான் சிவாகமத்தைத் தோற்றுவித்தருளிய அரிய செய்தியையும் கூறியிருத்தல் காண்க.

51, க்ரிஹாவிகாரம்—பொழில் விளையாட்டு.

52. மேகமண்டலத்தைத் தொடும் சாலமரங்களால் சூழப்பட்ட எந்த பட்டணமானது (மானகேடம்) லோகாலோக மலையினால் சூழப்பட்ட பூமண்டலம்போல் பிரகாசித்தது;

53. அந்த பெரிய பட்டணம் எவனுடைய (மதுராந்தகனுடைய) சேனைகளால் எறியப்பட்ட தீயின் பல்லாயிரக் கணக்கான ஜ்வாலைகளினால் கொளுத்தப்படும்பொழுது, கிளர்ந்தெழுகின்ற இந்திர நீலக்கல் போன்ற ஒளியையுடைய புகை மண்டலங்களால் மறைக்கப்பட்ட மேல்மாடங்களில், இங்குமங்கும் அடிக்கடி ஓடிக் கொண்டிருக்கிற அழகிகள், மேகக்கூட்டத்தின் நடுவில் மின்னல்கள் போல் பிரகாசித்தனர்.

54. அந்த பட்டணத்தினின்றும் மேலே எழுந்த நெருப்பு ஜ்வாலைகளால் விழுங்கப்பட்ட சொர்க்கலோகத்தைவிட்டு தேவர் கூட்டமானது, இது ஊழிக்காலத்து நெருப்பு என்று எண்ணி, அஞ்சி, திடீரென்று ஓடிப்போய் விட்டது.

ஏடு—ந. பக்கம்—க.

55. களங்கமற்ற புகழினால் அழகு செய்யப்பட்ட திசைகளின் முனையை உடைய 'யது' வம்சத்தைச் சேர்ந்த சாளுக்கியர்களுடைய இருப்பிடமானதும், சொர்க்கம்போல் பிறரால் (பகைவரால்) மனதாலும் அசைக்க முடியாததுமான மான்யகேடத்தை வீரனான தேவன் (மதுராந்தகன்) தண்டத்தினால் எரித்து, அவர்களுடைய அழுக்கற்ற புகழ்க்குவியல்களுடன் பல பொருள்களையும், ஊர்திகளையும் தனது பட்டணத்தில் இருந்துகொண்டே பறித்துக் கொண்டான்

56. அழகியதும், காற்றுக்கு நிகரான வேகமுள்ளதும், ஐந்து தாரைகள் உள்ளதுமான நல்ல குதிரையின்மேல் ஏறிக்கொண்டு, அதே போன்ற குதிரைகளில் ஏறியவர்களும், தனக்குத் தக்கவர்களும், காளைப்பருவம் உள்ளவர்களும், விருப்பமானவர்களும், குறிப்பறிந்தவர்களும், நன்றியறிதலுள்ளவர்களும், சிறந்த அறிவாளிகளும், கலைவல்லுநர்களும், களங்கமற்ற குலத்தில் தோன்றியவர்களும், ஒற்றுத்தொழிலில் தேர்ச்சிபெற்றவர்களும்,

57. எண்ணற்ற சிறந்த நற்குணங்களின் குவியல்களை உடையவர்களும், நேர் நின்று போர் செய்வதில் ஈடுபட்ட உறுப்புக்களை உடையவர்களும், போர்க்களத்தில் தேர்ச்சிபெற்றவர்களும்;

---

55. மான்யகேடம் என்பது முதலில் இராஷ்டிரகூடர்களுக்கும் பிறகு மேலைச்சளுக்கியர்களுக்கும் தலைநகராக விளங்கிய சிறப்புடையது, இது 'மால்கெட்' என்று இக்காலத்தில் வழங்குகின்றது. இதனை மண்ணைக் கடக்கம் என்று முதல் இராசேந்திரசோழன் மெய்க்கீர்த்தி குறிப்பது உணரத் தக்கது. தெற்கேயிருந்த சோழ அரசர்களும் வடக்கேயிருந்த மாளவதேயத்துப் பரமாரக்குலத்து மன்னர்களும் இந்நகரத்தின்மேல் அடிக்கடி படையெடுத்துச் சென்று அழிக்க நேர்ந்தமையால் மேலைச்சளுக்கியர்கள் இதற்கு வடகிழக்கில் நாற்பத்தெட்டு மைல் தூரத்திலுள்ள கல்யாணபுரத்தை அரணுடைய நகரமாக்கித் தம் தலைநகரமாக அமைத்துக்கொண்டான் என்பது ஈண்டு அறியத்தக்கதாகும்.

அவரவர் வருணத்திற்கேற்ற தண்டத்தை உடையவருமான சிற்றரசர்களுடன், மக்களுடைய கண்களையும், மனத்தையும் கவர்ந்த போரில், அழிக்கும் விளையாட்டைச் செய்துகொண்டு விளங்குகின்ற அவ்வீரன் (மதுராந்தகன்) தனது புயங்களால் தன் தந்தையான இராசராசனை, நிறைவேற்றப்பட்ட சூளுரையை உடையவராகச் செய்தான்.

58. வலிபொருந்திய அவன் வலிமிக்கவனாகிய சிம்ஹள தேசத்து அரசனை அஞ்சத்தக்க போரினால் (தண்டோபாயத்தினால்) வென்று அவனுடைய நாட்டையும், அவனுடைய முடியையும், அவனுடைய அரசபத்தினியையும், அவளுடைய முடியையும், அவனுடைய மகளையும், மற்றப் பொருட்குவியல்களையும், அவனுடைய ஊர்திகளையும் அவனால் நன்கு பாதுகாக்கப்பட்ட, பாண்டியனுடைய மாசற்ற இந்திர ஹாரத்தையும், முடியையும், சண்டையில் கைப்பற்றினான்.

59. புகழ்பெற்ற பல வென்றிமேம்பாடுகளுள்ளவனும் போரில் மதுராந்தகன் சேனைகளால் வெல்லப்பட்டவனுமான இலங்கையரசன் பெண்டுபிள்ளைகளைப் பறிகொடுத்த அச்சத்தினால் அவனுடைய இரு திருவடிகளையும் வணக்கம் செய்தான். அவனுடைய (மதுராந்தகனுடைய) மதுகையை இப்பொழுது என்னால் எவ்வாறு வருணிக்கப்படுவதாகும்.

60. தடைபடாத நிறைந்த பராக்கிரமத்தை உடையவனும், புலனடக்கம் உள்ளவனுமான எவன் (மதுராந்தகன்) புராணத்தீவை (பழந்தீவை) தண்டோபாயத்தினால் முற்றுகையிட்டு, அதன் சாரத்தை (சிறந்த பகுதியை) கைப்பற்றி அத்தீவைத் தன் வசப்படுத்தினான்;

61. நடுங்குகின்ற பகைவர்களின் கூட்டத்தைஉடையவனும், தன் புகழாகிற விதானத்தினால் வானம் முழுவதையும் மூடியவனுமான எவன் (மதுராந்தகன்) வலிமிக்க ஜயசிம்மனாகிற சிம்மத்தை ஆற்றலினால் வென்று, 'ஜயசிம்ஹ சிம்ஹசரபன்' ஆனான்;

62. அவனுடைய (மதுராந்தகன்) உயர்ந்த பராக்கிரமமாகிற தீயானது தைலனுடைய சந்ததியை எறித்து விட்டது என்னும் இது வியக்கத்தக்கதில்லை. ஏனெனில் கடலைக் கடந்து கடாரத்தை நன்றாக எறித்து விட்டான் என்கிற மற்றொரு அற்புதத்தினால்.

---

58. முதல் பராந்தகசோழன் (கி, பி. 907—953) பால் தோல்வியுற்றோடிய மூன்றாம் இராசசிம்மபாண்டியனால் பாண்டியர்களுடைய சுந்தரமுடியும் இந்திரனாரமும் பிறவும் இலங்கை வேந்தனிடம் அடைக்கலப் பொருள்களாகக் கொடுக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பெறும்பொருட்டு முதற் பராந்தகசோழன் இலங்கைமீது படையெடுத்து வெற்றிபெற்றும் அவை கிடைக்கவில்லை. பராந்தகசோழனது விருப்பம், ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர் முதல் இராசேந்திரசோழனால் கி. பி. 1017-ல் நிறைவேற்றப்பட்டமை இச்சுலோகத்தினால் நன்கு அறியக்கிடக்கின்றது. இவ்வரிய செய்தி இச் சோழமன்னனது மெய்க்கீர்த்தியாலும் உறுதியாதல் காணலாம்,

61, சயசிங்கன் என்பான் மேலைச்சளுக்கிய வேந்தனாகிய ஐந்தாம் விக்கிரமாதித்தன் தம்பியாவான், இவன் கி, பி, 1016-ல் முடிசூடி இரட்டபாடி நாட்டை ஆட்சி புரிந்தவன்.

63. உலகிலுள்ள அரசர்கள் யாவரையும் கொல்லுவதிலேயே விரதம் பூண்ட பரசுராமனுடைய தவத்தினால் நன்கு காப்பாற்றப் பட்ட நாட்டை ஆற்றல் நிறைந்த அவன் (மதுராந்தகன்) வென்று, எல்லா அரசர்கட்கும் மகிழ்ச்சியைக் கொடுப்பவனானான்.

64. எல்லா அரசர்கட்கும் விளக்கு போன்றவனும் நற்குணங்கள் நிறைந்தவனுமான அவன் கங்கையைக் கொண்டுவருதற்காகத் தவம் பூண்டு உடல் மெலிந்த பகீரதனுடைய கதையைக் கேட்டுச் சிரித்துக்கொண்டு அதன் கரையிலுள்ள அரசர்களுடைய முடிகளாலேயே அதை (கங்கையை) தன் நாட்டுக்கு அழைத்துவந்து விட்டான்.

65. அரசர்கட்குச் சூடாமணி போன்றவனும், வியாக்ரா அக்ரஹாரத்தில் (புலியூரில்) வாழ்ந்தவனுமான அவன் (மதுராந்தகன்) எல்லா வேதங்களிலும் கரைகண்டவர்களான அந்தணச் சிரேஷ்டர்களுக்கு அக்ரஹாரம் முழுவதையும் நீர்வார்த்துக் கொடுத்தான்.

66. உறுதியிலும், தைரியத்திலும், தவத்திலும், தேஜசிலும் வணக்கத்திலும் இணையற்றவர்களும், தமது மதிநுட்பத்தால் வேதங்கள் யாவற்றையும் இலகுவாக நினைப்பவர்களும், சாஸ்திரார்த்தங்களுக்கு விளையாடும் வீடுபோன்றவர்களும்,

ஏடு—ந. பக்கம்—உ.

தூய்மையானவர்களும் பிறரைத் தூய்மையாக்குகிறவர்களுமான அந்தணர்கள் நாளும் அந்த கிராமத்தில் இருந்துகொண்டு (அரசனை) புகழ்வதிலேயே விழைவு கொண்டுள்ளனர்.

67. தனது தாயின் பெயரால் காவேரியின் சுவையுள்ள நீர்ப் பெருக்கின் சாரத்தைப் (வளத்தை) பெற்ற திரிபுவனமாதேவி என்னும் பெயருள்ள அவ்வக்ரஹாரத்தை இராசராசன் பிள்ளையான அவன் மற்றக் கிராமங்களோடு கூடினதாகச் செய்து, வேதவொலியால் செவிடு பண்ணப்பட்ட திசைகளை உடையதாகவும் உலகத்தினுள் சாரமானதாகவும் (சிறந்ததாகவும்) செய்தான்.

68. மதுராந்தகன் என்னும் அவ்வரசன் தான் பட்டத்திற்கு வந்த ஆண்டில் ஆயிரத்திற்காக எண்பதுடன் கூடின எட்டாவது ஆண்டினை அடைந்தவனாய் நாளும் விழாக்கள் நிறைந்த தனது நாட்டில் நிலைத்த செல்வம் படைத்த பல ஆஸ்ரமங்களை இவர்கட்கு (அந்தண சிரேஷ்டர்களுக்கு) கொடுத்தான்.

69. அவ்வரசன் அந்த நாட்டின் நடுவிலே அமைந்த ஐம்பத்தொரு கிராமங்களை அந்தண சிரேஷ்டர்களுக்கு அன்புடன் கொடுத்தான்.

70. அமைச்சர்களுக்குள் வியாழனுக்கு ஒப்பானவரும் இவ்வரசனுடைய மற்றொரு உடல்போன்றவரும் நல்வழியைக் கடைப்

---

64, இச்சுலோகத்தின் பொருளும் கற்பனையும் படித்து இன்புறத்தக்கனவாகும்.
65, இச்சுலோகத்தால் தில்லைமாநகரில் முதல் இராசேந்திரசோழனுக்கு ஓர் அரண்மனை இருந்தமை நன்கு புலப்படுதல் காணலாம்.

பிடிக்கும் நல்லோர்கட்கெல்லாம் தலைவரும், கல்வி என்னும் ஆறுகட்கெல்லாம் கடல் போன்றவரும் ஸ்ரீ சகநாதன் என்ற பெயருள்ளவருமான இவ்வரசனுடைய அமைச்சர் இலக்குமி திருவிளையாடும் இடமான வேதமறிந்தவர்கட்கு இந்த கிராமத்துக்கு விண்ணப்பம் செய்பவராய் இருந்தார்.

71. இவ்வரசனுடைய பிரதானமான ஸ்தானத்தில் வசிப்பவனும் சிறந்த அறிவாளியும், புதிய அக்ரஹாரமாகிய பாற்கடலுக்குச் சந்திரன் போன்றவனும், வேள்விகளைச் செய்தவனும், பிரசித்தமான கிருஷ்ணபுரம் என்பது போன்ற சப்தங்களை உடையவனுமான நாராயணன் என்பவர் இந்த கிராமத்தினுடைய காரியங்கள் எல்லாவற்றையும் செய்து வந்தார்.

72. வித்தையாகிற அன்னப்பேடுக்கு விளையாடும் ஏரி போன்றவனும் வாதஇலக்குமிக்கு பரந்த விளையாட்டிடமானவனும், தைர்யம், நுட்பமானமதி, அன்பு, செல்வம், இரக்கம் இவைகட்குப் பிறப்பிடமானவனும் புலவர்களுடைய குழாங்களில் பண்டிதர்களை அளந்து காட்டும் உறைகல்லாய் இருப்பவனும், இம்மைக்கும் மறுமைக்குமான வேதமார்க்கமாகிற குகையின் தத்துவத்தைக் காட்டும் ஞான விளக்காய் இருப்பவனும், வணங்கிய அரசர்களுடைய கிரீடங்களால் பளபளவென மின்னுகிற பாதபீடத்தை உடையவனுமான இந்த இராசேந்திரசோழன், தலையை வணங்கினவனாய் இந்த கிராமம் நன்கு காப்பாற்றப்படவேண்டும் என்று நம்பிக்கையுடன் வருங்காலத்து அரசர்களைத் தாழ்ந்து யாசிக்கிறான்.

74. இந்த கிராமம் பலவிதமான வேள்விகளில் அழகுவிட்டு ஒளிக்கும் தீக்கொழுந்துகளால் பிரகாசமாக காண்பிக்கப்பட்ட திவ்யமான புண்ய மார்க்கத்தை உடையதும், நல் வழியை உபதேசிக்கும் தொழிலில் நிலைத்த புத்தியை உடைய அந்தணர்களுக்கு வந்தடையும் இடமாகவும் ஊழிக்காலத்தளவும் விளங்கட்டும்.

75. மூவுலகங்கட்குரிய கோளங்களையும் கடந்துசென்ற தனது உயர்ந்த குணங்களின் கூட்டங்களை உடையவனும், எல்லா சாஸ்திரங்களையும் கடந்த அறிவை உடையவனும், கலைகளில் தேர்ச்சி பெற்றவனும், அரசர்களின் முடிவரிசைகளால் தேய்க்கப்பட்ட பாதபீடத்தை உடையவனும், பிரகாசிக்கிற பெரிய மகிமையை துதிப்பதற்கு இடங்கொள்ளாத காவியங்களை உடையவனும் பகைவர்களை முறியடித்தவனும், செல்வம் நிறைந்தவனுமான இராசேந்திரசோழன் அகண்டமான இந்த பூமண்டலத்தைச் சந்திரன் நட்சத்திரங்கள் உள்ள காலம்வரை காப்பாற்றட்டும்.

76. பக்கத்துக் கிராமத்தில் வசிக்கிறவரும் சங்கராரியருடைய பிள்ளையுமான நாராயணனால் இந்த சாசனம் செதுக்கப்பட்டு சாஸ்வதமாகப் பண்ணப்பட்டது.

77, திரிபுவனமாதேவிக்குப் பேராசிரியரும், ராசேந்திரசிம்ஹனுக்குப் பேராசிரியரும் இந்த சாசனத்தை எழுதினார்கள்.

78. இருவரும் சிற்பங்களிலும், ஆகமங்களிலும் மெய்ப்பொருளை நன்குணர்ந்தவர்கள்.

# "கோழியூர்" பற்றிய ஒரு குறிப்பு.

**வித்துவான், அ. கிருஷ்ணமூர்த்தி,** M. A., B. L., B. O. L. (Hons.)
[தமிழ் மொழி பெயர்ப்பாளர்,
சோவியத் அரசாங்கக் கலைத்துறை அமைச்சகம், மாஸ்கோ.]

"கோழியோனே கோப்பெருஞ் சோழன்" புறம்—212.

"நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப
ஏம இன்றுயி லெழுத லல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாதெம் பேரூர் துயிலே".

(பரிபா—சங்க. இலக். சமாசம்: 2363)

"முறஞ்செவி வாரணம் முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென்".

(சிலப். 10: 247—48)

உறையூரைக் "கோழி" என்றும் "கோழியூர்" என்றும் அழைப்பதுண்டு. இதன் பரியாயப் பெயராக வாரணம் என்ற பெயர் வழக்கும் உண்டு. இவற்றை மேற்கண்ட செய்யுளடிகளிற் காண்க. சங்க நூல்களிலும், பிற்கால இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் 'கோழி' என்ற இப்பெயர் உறையூரைக் குறித்துப் பரந்து வழங்கி யிருக்கிறது. தமிழிலக்கியம் வல்லார்க்கு இவை யெல்லாம் புதிய செய்திகள் அல்ல.

சிலப்பதிகாரத்தின் நாடுகாண்காதை இறுதியில், கண்ணகியும் கோவலனும் பட்டினத்தின் நீங்கி நெடுவழி நடந்தபின், உறையூரின் மதில்வாயிலிற் சென்று புகுந்தனர் என்று கூறும்போது, ஆசிரியர் இளங்கோவடிகள், இக் கோழிநகரைக் குறித்து,

"முறஞ்செவி வாரணம் முன்சமம் முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென்"

என்றுகூறி, அக்காதையை முடிவு செய்கிறார். அதனைச் சிறிது விளக்கி நிறுத்தினார் ஆசிரியர் அடியார்க்கு நல்லார். கோழியூர் என்றதன் பெயர்க் காரணத்தை நமக்கு எட்டிய இலக்கியங்களில் முதன்முதல் சிலப்பதிகாரம் விளங்கக் கூறுகிறது என்பது என்முடிபு.

இக்குறிப்பில், யானை ஒன்றைக் கோழி வென்றது என்பதும், விந்தையான இந்த நிகழ்ச்சி நடந்த இடமாதலின், இவ்வூர் 'கோழியூர்' என்ற பெயரும் பெற்றது என்பதும் புலனாகின்றன. விந்தையோ, கற்பனையோ, அன்றி உண்மையோ என்று மயங்கும் படியான இவ்வகை நிகழ்ச்சிகள், இலக்கியங்களில் வரப்பெறுவது இயற்கை. எனினும், வரலாற்று மரபாக நினைக்கும்போது, இக் குறிப்பை, வரலாற்று உண்மையாக நினைப்பது பொருந்தவில்லை.

பழங்காலத்தில், யானைப்போர், கோழிப்போர், கொல்லேறு தழுவல், காடை வென்றி, மேழக வென்றி என்று பறவைகளையும், விலங்குகளையும் ஒன்றோடொன்று பொருதவிட்டுப் பழக்குதலுண்டு. கோழிப்போர் முதலியன தமிழகத்தின் சிற்றூரெல்லாம், சென்ற சில காலம் வரையில், விழா நிகழ்ச்சியாகவும், பொழுதுபோக்காகவும், போராட்டமாகவும் நடைபெற்று வந்தன. உலகின் பல அயல்நாடுகளிலும் இவ்வகைப் பழக்கங்கள் உண்டு. இன்றும் தமிழகத்தில் பல ஊர்ப் புறங்களில் இந்நிகழ்ச்சிகள் நிகழ்வது கண்கூடு. தமிழிலக்கியங்களில், கோழிப் போர் பற்றியும், கோழிகளின் வகைகள் பற்றியும், அவை பொருதல், வெல்லும் முறைகள்பற்றியும் இன்னும் பல குறிப்புகளைக் காணலாம். இலக்கணகாரர் உரைகளில், "மேலைச்சேரிச் சேவல் வென்றது" என்றால், கீழைச்சேரிச் சேவல் தோற்றது என்றுதல், வெல்லவில்லை என்றுதல், ஓடிற்று என்றுதல், கீழைச்சேரியினர்க்கு அது தோல்வியாயிற்று என்றுதல் கூறுக என்றெல்லாம் இப்பறவை விலங்குப் போராட்டங்களையெல்லாம் இலக்கண இலக்கிய வழக்கினை விளக்க உதாரணமும் காட்டுவர்.

இப்போராட்டங்கள் இவ்வாறு பரந்துபட்ட உலக வழக்கும் நூல் வழக்கும் உடையனவாயினும் இவற்றில் ஒன்று கருதத்தக்கது. யாட்டொடு யாடும், ஏற்றொடு ஏறும், கிளியொடு கிளியும், கோழியொடு கோழியும் தாம் தம்முள் மாறுடப் பழக்குவர்; இவ்வாறே போர் செய்ய விடுவரே தவிரப் பறவையொடு விலங்கையும், விலங்கொடு பறவையையும் போராடப் பயிற்றுவதுமில்லை; இவற்றுக்கு ஆட்சியும் தெரிந்திலது.

சிலப்பதிகாரக் கதைக் குறிப்பில், யானையொடு கோழி போரிட்டதாக—வென்றதாகக் கூறப்பட்டுள்ளது. ஒரு சிறிய கோழிப் பறவை, யானையை எவ்வாறு போர் வெல்லுவது? மேலே குறிப்பிட்ட நூலியல், உலகியல் என்ற இருவகை வழக்குகளும் இவற்றை விளக்கப் போதியன அல்ல. எனவே, இது ஒரு புதிரான செய்தியாகப் புரியாமல் இருந்தது.

இங்கு ஒரு சிறு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன். 17 ஆண்டுகட்கு முன்பு, கொச்சி மன்னர்க்குத் திவானாக விளங்கிய சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார்க்கு நான் தமிழிலக்கியங்களைக் கற்பிக்கும் பேறு பெற்றிருந்தேன். சிலப்பதிகாரத்தைப் பாடஞ் சொன்னபோது, இந்தப் பகுதியில், கண்ணகியும் கோவலனும் வழிவந்த வருத்தத்தோடு உறையூர் மதிலுக்குள் நுழைந்து செல்லுகின்றனர். ஆனால் படிக்கிற எங்கள் மனமோ, அவர்களைத் தொடர்ந்து செல்லாமல், மதிலுக்கு வெளியிலேயே தங்கிவிட்டது. காரணம், ஆசிரியர் அடிகளார், கோழி யானையை வென்ற செய்தியை நயம்படக் கூறுகின்றாராயினும், அக் கதைக் குறிப்பால் எழுந்த விபரீத உணர்ச்சி சர். ஆர். கே. எஸ். அவர்கட்கு நீங்கவில்லை. இந்தக் குறிப்பு, காதை நடுவில் வந்திருந்தால், பாடத்தோடு பாட

மாக ஒருவாறு ஓடிப்போகும். காண்ட முடிவாக இருந்ததால், அன்றைப் பாடத்தை முடித்து, நூலை மூடிவிட்டுச் சிறிது உரையாடியதில், சர். ஆர். கே. எஸ். அவர்கள் கடைசியாகக் குறிப்பிட்டார்கள், "விபரீதமாகத் தோன்றினும் இவ்வகைக் குறிப்புகளை விரைந்து புறக்கணிக்கவேண்டியதில்லை. இவையெல்லாம் விளங்காத குறிப்புகள்—ஆராய்ச்சிக்குரியன என்று நிறுத்திவைத்தாற் போதும்" என்று. இதை மேலும் வற்புறுத்திக் கூறுமுகத்தான், "பழைய தமிழ் நூற் குறிப்புகள் பல அப்படி ஒன்றும் பொய்யும் புனைவுமாக அதிகம் காணப்படவில்லை, இப்பொழுது அறிஞர்கள் எழுதிவரும் பல ஆராய்ச்சிகள்—கட்டுரைகளைப் பார்த்தால், போகப்போக ஏதேனும் விளங்கலாம்" என்றார். இன்று இவ்வாறு அது விளக்கமாகும் என்பதை அன்று நான் நினைக்கவில்லை.

எவ்வாறாயினும், இதை ஏற்றுக்கொண்டு ஆராய்வதனால், இரண்டு கேள்விகள் பிறக்கின்றன. ஒன்று, யானைக்கும் கோழிக்கும் போர் ஏற்பட்ட சூழ்நிலை யாது? ஏற்படக்கூடிய அப்போரில், யானையைக் கோழி வெல்லுமாறு எங்ஙனம்? இவற்றுள், முதற் கேள்விக்கு விடையைப் பின்வருமாறு எளிதாக உய்த்துணரக்கூடும்.

யானைக்கும் கோழிக்கும் போர் உண்டாக்குவதும், போரில் கோழி வெல்லுவதுமான நிகழ்ச்சிகளை மக்களில் யாரும் பொழுது போக்காகவோ, விலங்குப் பயிற்சியாகவோ ஏற்பாடு செய்திருக்க முடியாது. இது இயற்கை முரண்—வழக்கு முரண் என்று முன்பே காட்டியிருக்கிறேன். அவ்வாறு ஒருகால் ஒரு ஏற்பாட்டின்படிக் கோழி வெல்லுவதானாலும், அது நிகழக்கூடிய ஒரு வழக்கு நிகழ்ச்சியாகிவிடுவதால் அது நிகழ்ந்த இடத்திற்கு அந்நிகழ்ச்சியின் ஏதுவால், 'கோழியூர்' என்ற விந்தை குறிக்கும் புனை பெயர் ஒன்று வழங்க நியாயமில்லை! எனவே, இப்போராட்டம் ஏற்பாடு செய்து நிகழ்ந்த ஒன்றாக இருக்கவியலாது. ஏதோ தற்செயலாக யானைக்கும் கோழிக்கும் ஏற்பட்ட ஒரு பூசலாகவேதான் இதனைக் கொள்ளவேண்டும்.

தற்செயல் நிகழ்ச்சியாயினும், யானையைக் கோழி வெல்லுமாறு எங்ஙனம்? என்ற இரண்டாவது கேள்விக்கு எதுவும் விடை கிடைப்பதில்லை. மேற்கொண்டு சிந்தனையும் ஓடவில்லை!

பத்தாண்டுகட்குமேல் கடந்தன. 1952 ஏப்ரல் 16-ஆம் நாட் காலையில், "இந்தியன் எக்சுபிரசுச்" செய்தித் தாளைப் படித்துக்கொண்டிருந்த நேரம், "**யானைகளை அடக்க ஒரு கோழி**" என்ற தலைப்பில் ஒரு சிறு செய்திக் குறிப்பைக் கண்டேன். செய்தியின் எனது மொழிபெயர்ப்பு வருமாறு :—

"கல்கத்தா, ஏப்ரல் 15; "பறக்குந்தோணி" (Flying Ark) என்னும் பெயருடைய ஒரு கே. எல். எம். விமானம், இரண்டு யானைக் கன்றுகள், ஒரு பிணவுப் புலி, மூன்று குழவிக் கரடிகள்,

மூன்று மலைப் பாம்புகள், ஆறு குள்ள நரிகள், 10,000 பறவைகள் ஆகியவற்றுடன், இன்று ஆம்ச்டர்டம்முக்கு டம்டம்மிலிருந்து புறப்பட்டது.

"விமானத்திற் செல்லும் விலங்கினக் காவலர் திரு. ஏ. ஆர். தாட், விமானப் பயணத்தில், யானைகளைக் கட்டுப்படுத்தத் தம்மோடு ஒரு பெட்டைக் கோழியையும் கொண்டு சென்றிருக்கிறார். நல்ல ஒரு அளவுக்கு அவர் செய்த ஆராய்ச்சியினால், 'யானை ஒரு பெட்டைக் கோழிக்குத்தான் படிமானமாகக் கட்டுப்படுகிறது; அக்கோழி வழக்கமாக யானையின் தலையில் சென்று உச்சி மிதிக்கிறது' என்று அவர் கண்டிக்கிறார்.

"இலட்சுமி, வீணா என்னும் பெயருடைய அவ் யானைக் கன்றுகள்—ஒவ்வொன்றும் 1600 பவுண்டு எடையுடையது-மிலான் நகரத்து உயிர்க் காட்சிச்சாலைக்குச் செல்கின்றன. ("இந்தியன் எக்சுபிரசு"; 1952 எப். 16 : பக். 1 பத்தி-3) செய்தித் தாளில் உலக நிகழ்ச்சிகளை ஊன்றிப் படிக்கும் நேரம் இதைப் படித்ததும் அவை மறந்து, சிலப்பதிகாரக் கதைக் குறிப்பு நினைவிற் பட்டது. பிறகு நினைக்க நினைக்க அந்தக் கதை மேன்மேலும் விளங்கிக் கொண்டே சென்றது. விளங்கிய வண்ணம் வருமாறு :—

பழைய நகரத்து வீதிகளில், யானைகள் மதமேறி ஓடுவது அடிக்கடிக் காணும் வழக்கம். இவற்றை அடக்குவது ஒரு பெரிய அருஞ்செயல். இந்த ஒரு நிகழ்ச்சியை மட்டும் வைத்துப் பல கதைகள் எழுந்திருக்கின்றன, சரித்திர நிகழ்ச்சிகளும் பல. சிலப்பதிகாரம், மணிமேகலை, உதயணன் கதை, சிந்தாமணி முதலானவற்றில் கதைகளும், புறநானூறு, மதுரைக்காஞ்சி, கல்வெட்டுகள் முதலானவற்றில் வரலாறும் காணலாம். இவ்வாறு மதமேறிய யானை **அல்லது ஏதுமில்லாமல் தன்னியல்பில் செல்லும் யானை ஒன்றுக்கும் கோழிக்கும் தற்செயலாக ஒரு மோதல் ஏற்பட்டு, அது ஒரு பூசலாக விளைந்திருக்கவேண்டும்.** தன் துதிக்கை (இது தூம்புக்கை [புழையுடைய கை] என்பதன் மரூஉ) யால் யானை கோழியை அங்குமிங்கும் சுற்றி வெருட்டிச் சுழற்றி அலைக்கழிக்க முடியும். கோழியும் சிறகெறிந்து யானையைப் பறந்து பறந்து எதிர்மாறுகொள்ள முடியும். கோழி தாவிப் பறக்கும் சுற்று மருங்கெல்லாம் யானை உடனுக்குடன் எளிதில் வளைய முடியாது. கோழி, எளிதாகப் பறந்து பற்றுகிற ஒரு இடத்தைக் கவர, யானைக்குப் பெரிதும் வருந்திய முயற்சி வேண்டும். மேற்குறித்த விமானத்து விலங்கின ஆராய்ச்சியாளர், கோழி நேரே சென்று யானையின் தலையுச்சியில் அமர்கிறது என்றார். இந்தப் பூசலில், கோழி தாவிப் பறந்து, அதனை உச்சி மிதித்து, அதன் மத்தகத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். யானை உடனே ஆட்டம் ஒடுங்கி நின்றுவிட, இதை விந்தையாகக் கண்டு நின்ற நகரமாந்தர், இந்நகர்ப் பகுதிக்

குக் **கோழியூர்** என்று பெயரிட்டழைத்தல் மிக்க பொருத்தமுடைய தாதல் புலப்படும்.

இவ்வாறு காணின், இது கதையாக விளைந்த கற்பனைப் பெயரன்று; உண்மையொடு பொருந்திய காரணப் பெயர் என்பது புலனாகும். பல்லாயிரம் ஆண்டுகட்கு முந்திய ஒரு நகர் மருங்கின் சிறிய நிகழ்ச்சி, புதைந்து மறைந்து விளங்காதுகிடந்து, இங்கு அது விளக்கம் பெறுகிற தன்மையைக் காணுந்தோறும் வியப்பாகின்றது. சிலப்பதிகாரக் கோழியூருக்கும், டம்டம் விமான நிலையத்திற்கும் இடவகை — பொருள்வகை — காலவகை — எந்த வகையில் தொடர்பு! இது நினைக்க இன்னும் பெரிது வியப்பாகிறது,

நிற்க, மேற்கண்டவிதமாக ஒருவாறு நமக்கு விளக்கங் கிடைத்து விட்டது. எனினும், வேறுசில கேள்விகள் எழுகின்றன. கோழி யானையின் தலைமீது அமர்ந்ததும் அங்கு என்ன ஏற்படுகிறது? மாபெரும் யானை அந்தச் சிறு பறவையைச் வாரிச் சுழற்றித் தரை மீது ஏன் மோதலாகாது? அது கட்டுப்பட்டது ஏன்? கோழியின் கூரிய நகமும், யானை மத்தகத்தின் மெல்லிய உணர்வும் கூடிப் பொருந்தவில்லையா? நகத்தின் கூர்மைதான் யானை அடங்கக் காரணமெனின், காக்கை புரு முதலிய பறவைகளின் கூரிய நகங்கள் அல்லது நகம் போன்ற பிற கருவிகளை வைத்து யானையைக் கட்டுப் படுத்தலாகுமே? அங்குசத்தின் தத்துவமும் இவ்வகையில் அமைந்ததுதானே? இவ்வாறன்றி, இத்துறையில், ஆராய்ந்த விமானத் துறையாளர், நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு, யானையை அடக்க ஒரு கோழி—அதுவும் **பெட்டைக்கோழியைக்** கொண்டு சென்றதாகச் செய்தி குறிப்பிடுகிறதே! என்று இவ்வளவெல்லாம் சிந்திக்கும் போது, மேற்பட்ட உண்மைகள் விளங்குவதில்லை.

இருப்பினும், கவலைப்படத் தேவையில்லை, ஏனெனில், இலக்கியத்திற் கண்ட கதை, சரித்திர உண்மையாக விளங்கிவிட்டது. மேற்கண்ட கேள்விகளை விஞ்ஞானம் தெளிவுசெய்யவேண்டும். இவ்வாராய்ச்சி, இலக்கியத்தில் தோன்றி, சரித்திரத்திற் சென்று, இப்போது விஞ்ஞானத்தில் நுழைகிறது. அது என் திறனுக்கு அப்பாற்பட்டது. இயலுமானால், வானிலையத்தாரிடமிருந்து மேற் கொண்ட விவரங்களைப் பெற்று ஒரு காட்சி விளக்கம் (Demonstration) ஏற்பாடு செய்வது பயனுடையதாகும்.

"முறஞ்செவி வாரணம் முன்சம முருக்கிய — புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென்"—என்ற அடிகளார் வாசகத்தை மீண்டும் ஒருதரம் படித்து, இந்த உரை விளக்கத்தை முடிக்கிறேன்.

# நவமணித் தேர்ச்சியில் தமிழரது கலையுணர்ச்சி.

[K. சோமசுந்தரம் பிள்ளை, B.A., B.L.,]

'நாகலோகமும் தேவலோகமும் போன்ற போகமும் நீண்ட புகழும் நிலைபெற்ற புகார்' தமிழரது கலைச் செல்வத்தின் விளக்க மென்று தண்டமிழாசான் இளங்கோவடிகள் வழங்கிய சிலப்பதிகாரத்தால் நன்கறியப்படும். தமிழ் மரபின் செழுங் களஞ்சியமாய சிலப்பதிகாரத்தைப் படிக்குங்கால் புகாரின் பழங்குடி மக்களது அருங்கலைச் சிறப்பும், தொழிலாற்றும் வாணிபப் பெருக்கமும் சீரும் செல்வமும் ஒரோவழி உணரப்படும். பொன்னும் பொருளும் தேடி அன்பும் அருளும் அறனும் ஒருங்கே விரும்பும் பழந் தமிழரது வாழ்வு இன்பமயமாய் வயங்குவதனுல் பொதியமும் இமயமும் போன்று தமிழ்ப் பழங்குடி மக்கள் நிலைதிரியாது அடக்கமுற வாழ்ந்தனர். அம் மலைகளைப் போன்று அம் மக்கள் பகைவர்களாலும் நடுக்கம் கொண்டாரில்லை. மற்றும் அம் மலைகள் ஒடுங்குவதின்மை போன்று, மக்கள் கலை அறிவிலும் பொருள் வளத்திலும் ஒழுக்க விழுப்பத்திலும் ஒடுங்கினுரில்லை.

தமிழ் முனிவரது தவ நிலையம் பொதியம். தமிழ் இறையனுரது அருள் நிலையம் இமயம். தமிழ்க் கலைச் செல்வத்துப் புண்ணியப் புகழ் நிலையம் பூம்புகார். இவ்வாருய தனிச் சிறப்பினைத் தனக்கே யுரிய புகாரின் நகரமைப்பு, தமிழ் மக்கள் சமுதாயத்திற்குரிய பல்வகை தொழில் முறைகளுக்கேற்ப மக்களையும் அவர்கள் இருக்கும் பெருந் தெருக்களையும் அணியாகக் கொண்டுள்ளது. செல்வத்திரு விளங்கும் பயன்மிக்க நவஇரத்தனமணிகள் விற்கும் வணிகர் பெரு வீதிக்கு நமது கவனத்தை ஈர்த்துச் செல்வோம்.

**வைரம்**

காக பாதமும் களங்கமும் விந்துவும்
ஏகையும் நீங்கி இயல்பிற் குன்ரு
நூலவர் நொடிந்த நுழைநுண் கோடி
நால்வகை வருணத்து நலங்கேழ் ஒளியவும்

**மரகதம்**

ஏகையும் மாலையும் இருளொடு துறந்த
பாசார் மேனிப் பசுங்கதிர் ஒளியவும்

**மாணிக்க வருக்கம்**

பதுமமும் நீலமும் விந்தமும் படிதமும்
விதிமுறை பிழையா விளங்கிய சாதியும்

**புருடராக வருக்கம்**

பூச வுருவின் பொலந்தெளித் தனையவும்

**வைடூரியம்**

தீதறு கதிரொளித் தெண்மட் டுருவவும்
நீலமணி வருக்கமும் கோமேதக வருக்கமும்
இருடெளித் தனையவும் இருவே றுருவவும்

**மாணிக்கம், புருடராகம், நீலம், கோமேதகம்**

ஒருமைத் தோற்றத் தைவேறு வனப்பின்
இலங்கு கதிர் விடுஉம் நலங்கெழு மணிகளும்

**முத்து வருக்கம்**

காற்றினும் மண்ணினும் கல்லினும் நீரினும்
தோற்றிய குற்றந் துகளறத் துணிந்தவும்
சந்திர குருவே அங்கா ரகனென
வந்தநீர் மைய வட்டத் தொகுதியும்

**பவள வருக்கம்**

கருப்பத் துளையவும் கல்லிடை முடங்கலும்
திருக்கு நீங்கிய செங்கொடி வல்லியும்

**இரத்திவக் கூடைச்சீர்**

வகைதெரி மாக்கள் தொகை பெற்றோங்கிப்
பகை தெறல் அறியாப் பயங்கெழு வீதியும்
(180—200 ஊர்காண் காதை)

ஒன்பது வகைப்பட்ட மணிகளின் பிறப்பு முதல் சிறப்பீறாய இயல்பனைத்தும் உணர்ந்து அறிவுறுத்தவல்ல வணிகத் திருவினர் வழி புகார் செழித்த மாநகராயது. அன்னோர் கொள்வதும் மிகை கொளாது கொடுப்பதும் குறை கொடாது மணிகளின் உயர்வு தாழ்வு கண்டு உரிய விலை பகர்வர். மணிகளின் இயல்பு அறியாது தாறுமாறாய விலை கூறி மக்களை ஏமாற்றும் வழக்கம் அன்னவர் பாலில்லை. என்னெனின் அவ்வகை ஏமாற்றம் இவர்க்கே முடிவில் ஏதம் தருமாதலானென்க. மணிகளின் நற்றத்தையும் குற்றத்தையும் நன்கு கண்டு தகுந்த விலைக்கு விற்பதால் அன்னவர், பண்டு வழங்குதற்குரிய அருட் திருவும் வற்றாப் புகழும் எளிதே எய்தப் பெறுவாராயினர். இத்தகைய தனவணிகர் இறையன்பை நிறைவாகப் பெற்றவர்களாதலால் இவர்கள் வாழும் நாட்டில் அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல் செழித்தோங்கியது. 'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னோன் முடியும்' என்பதற்கேற்ப இத் தன வணிகர்களது பொன்வழி சிறக்கும் பொருள், புகாருக்கு எல்லாச் சீரும் செல்வமும் தரும் தகுதியினையுடைத்து.

'செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும்' எனப்படுவதால் செல்வம் அல்லலைத் தருமென ஐயுற வேண்டிய நியதி இல்லை. பொன்னும் மணியும் அருமையும் அழகும் மதிப்பும்கொண்டு சிறந்து நிற்றலேபோல் இறையும் அழகு, மதிப்பு, அருமை, வன்மை முதலியன மிக்குடையராய் வயங்குவதால், இறைவனை 'அரும் பொன்னே! மணியே! மாணிக்கமே! என வாழ்த்துதலே அல்லலைத் தீர்க்குமென்க. வாழ்த்துதலால் பெற்ற செல்வம் அல்லலைத் தீர்த்து சிறப்பினையே தருமெனும் வாய்மை மலையிலக்கேயா மென்க. பொன்னுக்கும் மணிக்குமுரிய சீரிய ஒளியுமுடைய இறைவன் பெருஞ் செல்வமுடையனாதல் பற்றி, தன்னைப்

பொன்னே! மணியே! மரகதமே! மாணிக்கமே! என வாழ்த்தி னுருக்கும் செல்வமும், அச் செல்வத்தாற் பெறப்படும் சிறப்பும் அளித்தல் இறைவர்க்கெளிதே. மற்றும் இறைவன் பொன்மேரு வினை வில்லாக வளைத்து தன்னகத்தே கொண்டுள்ளவனுதலாலும், தன்னை வணங்குபவர் மனத்தே, தானென்று முளைத்தெழும் ஆணவ வலி கெட, மனத்தை வளைத்து அல்லலகற்றி பேரறிவு உதவி அன்னவரது உயிருக்குரிய ஒளி சிறந்து மிகும்படி செய்ய வல்ல வனுமாவன். ஆணவம் நீங்கப்பெற்று இறைவனேடொன்றுதற் குரியார் இறைபோல் வணங்கப்படுவதற்குரியராய்த் திரியுங்காலை, அன்னவர் பொன்னையும் மணியையும் ஓடென்றும், கல்லென்றும் கருதி எறிந்து விடுவதில் நாம் இறும்பூது அடைவதில் வியப்பில்லை. மணிகளின் மதிப்பினை அன்னவர் அறியாது கடிந்தனரோ எனின் அற்றன்று. என்னெனின், அம் மணிகளைப்பற்றிய தேர்ச்சிக் கலையில் வல்ல அன்னவர் இறைவனை, அம் மணிகளைவிட சாலச் சிறந்தவரெனக் கருதி,

"முத்தினை மணியைப் பொன்னை முழுமுதற் பவளமேய்க்கும்
கொத்தினை வயிர மாலைக் கொழிந்தினை யமரர்சூடும்
வித்தினை வேதவேள்விக் களிற்றினை யுரித்தவெங்கள்
அத்தனை நினைந்த நெஞ்ச மழகிதா நினைந்தவாறே'

என வாயாரப் போற்றி வாழ்த்தியதாலறிக.

இனி சிலப்பதிகாரத்துத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் மனனுணர்வு கொண்டு அணிந்து அவைகளைப் போற்றுமுகத்தான், உணர்வு களும் செயல்களும் ஆற்றலும் கொண்டு வயங்கி வாழ்ந்தனர். இஃதோடமையாது அம்மணிகளை அணிதலாலாய பயனைப் பிறர்க்கு இயக்கி உணர்ச்சி வகையில் ஊட்டும் இயல்புடையார். அம்மக்கள் நவமணிகளைப்பற்றிய தேர்ச்சிக் கலையில் எவ்வகையில் சிறந்தவ ரென்பதைப்பற்றியும், நவ மணிகளின் பிறப்பினையும் சிறப்பினையும் பற்றியும், இனிச் சிறிதுக் கருதிக் காண்குவம்.

நவ இரத்தின மணிகள் ஒன்பதென்பர் ஒள்ளிய வுணர்வுடை யார். அவை, வயிரம், மரகதம், மாணிக்கம், புருடராகம், வயிடூரியம், கோமேதகம், நீலம், முத்து, பவளம் என்பன. பெரும்பாலும் இவை பூமியில் விளைவன.

வாசவன் வேள்விக் கிரங்கியோர் பசுவாய்
வந்திடும் வலனைவச் சிரத்தால்
ஆசற வரிந்த வுறுப்பினை வானே
ரருந்த மண் விழுந்தன தப்பிக்
காசறு வித்தாய் மலையினுஞ் சிறந்த
கடலினுந் தீவினும் புதுமை
பேசரும் பெரிய நாட்டினும் பிறந்து
விளைந்தன பிறங்கிட வன்றே.

பரியவா னென்பு வயிர நீடிறைச்சி
பவழ மென்கரு விழிநீலம்
பொருவருமொளி சேர்கவம் புருடராகம்
பொருந்து செங்குருதி மாணிக்கம்
மருவியமயிர் வைடூரிய நிணங்கோ
மேதக வாண கைமுத்தம்
குருவளர் பித்து மரகதமென்று
கூறுவர் குலமணிப் பிறப்பே.

மாணிக்கம் விற்ற படலம்—
(திருவாலவுாயுடையார் திருவிளையாடற் புராணம்)

வயிரம் முதலிய நவமணிகள் ஞாலத்தின் உட்புறத்திலும் மலைகளிலும், ஆறுகளிலும் நெடுங்காலம் ஆழ்ந்து பதிந்திருக்கும் சில தாதுக்கள் பற்பல சக்திகளால் ஒளியுற்று பலவித நிறங்களுடன் கிடைக்கப்பெறுகின்றன. சிலவகை மணிகள் எரிமலைகளின் எக்கர் நிலப்பரப்பிலும் பூகம்பத்தால் அதிர்ச்சியுற்ற நில எல்லையிலும், அழற்கோடு(Equator)செல்லும் நாடுகளிலும் பெரிதும் காணப்படும்.

எல்லா மணிகளைக் காட்டிலும் அருமையும் அழகும், மதிப்பும் சிறந்து நிற்றலோடு வன்மைமிக்குடையது வயிரம்.

"மாமணி மரபுக் கெல்லாம் வைரமே முதன்மைச்சாதி
யாமென வுரைப்பர் நூலோர் ரதிகம் யாதென்னிலேனைக்
காமரு மணிகட்கெல்லாந் தமரிடு கருவியாமத்
தூமணி தனக்குத் தானே துளையிடுங் கருவியாகும்'

வயிரத்தால் எத்தகைய மணி வகைகளையும் துண்டுபடுத்திவிடலாம். தூய்மை காட்டும் வகையில், பிற மணிகளின்கண் குற்றம் நிறைந்த பாகத்தை அறுத்தெறிய வயிரம் துணை செய்யும். ஆனால் வயிரத்தின்மேல் எவ்வகை கோடுகளும், ரேகைகளும் எத்தகைய துணைக் கருவிகள்வழி இழுக்கமுடியாதென்க. எனவே பிறமணிகளின் அழுக்கினைப்போக்க அறுக்கும் வயிரம், பிறவற்றால் தனக்கு இழுக்கு இல்லாத இயல்பிற்றென்க. வயிரத்தின் பிறப்பின் வகை,

"வயிரம் வைராகர மேருப்
பொருப்பு இமவான் கூடந்
துங்கச வாலக்கம வந்திக மாதங்கந் தொகுமருண
மெனுமெட்டா கரமே தோற்றம்" (திருவால-திருவிளையாடல்)

என்ற வரிகளான் பெறப்படும். மேல்நாட்டு இரசாயன வாதிகள் வயிரத்தை, ஞாலத்தின்கண் பல் நூற்றாண்டுகளாக அழுந்திக் கிடக்கும் ஓர்வகை கரியென்றும், அது வெளிவரின் ஒளிவிடும் வயிர

மென்பர். விலைமதிக்கவொண்ணு உயர்ந்த வைரம் கனமில்லா திருத்தல்வேண்டும். மற்றும் அதனைக் கீழ்புறம் சாய்த்துப்பிடித்துச் சற்று உற்று நோக்கினல், அதன் ஒளி, மேல்நோக்கிச் செல்லாது, கீழ்புறத்திலேயே சிதையாது மிகுமாறு போலக்காட்டும்.

வயிரம் இந்திர விற்போல் எழுவகை நிறங்களையுடைய ஒளியினை வீசும் பெற்றியது.

'மேகவானகஞ் சேர்மழபாடி வயிரத்தூணே' என்பர் ஆளுடைய அரசு. மற்றும், வயிரம், இருளில் மிளிரும் ஒளியுடையதாதலால், அதனைக் 'கருவிருட் சுடரொப்பான்' என மீண்டும் சிவபெருமானுக்கு உவமானம் கூறுவர்.

நன்றருளித் தீதகற்று நம்பிரான் கா
ணுன்மறையோ டாறங்க மாயினுன்காண்
மின்றிகழும் சோதியன்கா ணுதிதான் காண்

என்பதூஉம் அவர் தம்வாய் மொழியாயிற்று.

'பலகை யெட்டும் கோண மாறும்
இலகிய தாரையும் சுத்தியும் தராசமும்
ஐந்து குணமென் றறைந்தனர் புலவர்
இந்திர சாபத் திகலொளி பெறினே'

என்ற சூத்திரமும், மக்கள் மிக்கவளனேடு கையாண்டு நலம் பெறற்குரிய வயிரத்தின் சீர்மையினை விதந்து விளக்குவதாகும். 'வயிரப் பலகை' யினைப்பற்றி கருதுதற்கினிய அரிய குறிப்பொன்று

'அலையடுத்த பெருங்கடனஞ் சமுதாவுண்டு
அமரர்கடந்தலை காத்த வையர் செம்பொற்
சிலையெடுத்து மாநாக நெருப்புக் கோத்துத்
திரிபுரங்கடீயிட்ட செல்வர்போலு
நிலையடுத்த பசும்பொன்னுன் முத்தானீண்ட
நிரைவயிரப் பலகையாற் குவையார்த்துற்ற
மலையடுத்த மழபாடி வயிரத் தூணே!
யென்றன்றே யானரற்றி நைகின்றேனே'

என்ற திருமழபாடி திருத்தாண்டகத்தில் காணப்படுவதினுன் அது தமிழ் நாட்டில் பெரு வழக்குடையதாய் பயன்பட்டு வந்த உண்மை பெறப்படும். துரிய நிலையினையடைய விரும்புவார், சிவத்தன்மை விட்டு நீங்கா மனவுறுதியினை நல்க இத்தகைய வயிரத்தை ஓர் துணைக் கருவியாக அணிவரென்றும், மற்றும் அஃது அன்னரது உடலை செம்மை நலமும் உண்மையழகுமுடையதாக்கி உய்விக்கும் பான்மையுடையதென்பதும் ஆன்றோர் பிறரும் யாண்டும் உரைத்துச் செல்லுதலாற் றெளியப்படும். (தொடரும்)

# மண்ணாசை கொண்ட மன்னர்கள்

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

சாமி. சிதம்பரனார்

---

**நாடுபிடிக்கும் ஆசை :**

ஆசைகளிலே மூன்றை முதன்மையாகக் கூறுவர் : அவை மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்பன. நீதி நிலவிய பழங்காலத்திலும் பல மன்னர்கள் இந்த ஆசைகளுக்கு ஆளாகித்தான் இருந்தார்கள். மண்ணாசை—அதாவது நாடு பிடிக்கும் ஆசை—ஒன்றிருந்தால் போதும். ஏனைய இரண்டு ஆசைகளும் அதைத் தொடர்ந்து நின்றே தீரும்.

'போதும் என்ற மனம் அரசர்க்கு ஆக்கம் தராது ; தனது நாட்டை அகலப் படுத்தவேண்டும் என்ற ஆசை வேண்டும் ; இவ்வாசையுள்ள மன்னனே குன்றாத புகழுடன் குறையற்று வாழ்வான்' என்பது பழய நீதி. தமிழ் மன்னர்களிலே பலர் இந்த நீதிக்கு விலக்கானவர்கள் அல்லர். இதற்குத் தமிழ் நாட்டு முடியுடை மூவேந்தர்களின் வரலாறே போதுமான தாகும்.

சேரர், சோழர், பாண்டியர் மூவரும் படைப்புக் காலந் தொட்டு வாழும் பழந் தமிழ்க் குடியினர். மூவரும் தமிழர்கள். ஒரே மொழியினர் ; ஒரே நாட்டினர் ; ஒரே பண்பாட்டை யுடையவர்கள். இவர்கள் மூவரும் ஒன்றுபட்டு வாழ்ந்த காலம் மிகவும் குறைவு. பெரும்பாலும் ஒருவரோடு ஒருவர் போர் புரிந்து கொண்டுதான் இருந்திருக்கின்றனர். இதற்குக் காரணம் மண்ணாசை, பொன்னாசை, புகழ் ஆசையைத் தவிர வேறில்லை.

அதிகாரச் செருக்கு ஆரையும் விடாது. அதிகாரத்தை விட்டுக்கொடுக்க விரும்புகின்ற மக்கள் மனிதத் தன்மையி னின்றும் மேம்பட்டவர்கள். தனியதிகார உரிமை படைத்த வர்கள் தாழ்மையுடன் நடந்துகொள்ள விரும்பமாட்டார்கள். மற்றவர்களுடன் ஒற்றுமையுடன் ஒன்றுபட்டு வாழக்கூட அவர்கள் மனம் துணியாது. அனைவர்க்கும் தலைவராய் ஆணை செலுத்தவே விரும்புவர். தாம் சொல்பவைகளுக்கெல்லாம் மற்றவர்கள் தலைவணங்க வேண்டும் என்றே நினைப்பார்கள். தனி அதிகார வெறி 'ஆசைக்கோர் அளவில்லை' என்ற இடத்தில் தான் வீற்றிருக்கச் செய்யும். தனியதிகார வெறியைத்தான் 'ஏகாதிபத்திய வெறி' என்று இக்காலத்தினர் இயம்புவர்.

**தொல்காப்பியம் கூறுவது :**

பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்திலே புறத்திணையைப்பற்றிக் கூறும் பகுதியினால் நாம் பல உண்மைகளைக் காணலாம். சிறப்பாக அதில் கூறப்படும் போர்முறை தற்பாதுகாப்புப் போராகவே காணப்படுகின்றது. ஆயினும் தமிழகத்தில் மண்ணாசைகொண்டு போர் செய்த மன்னர்கள் இருந்தனர். தம் வலிமையைக் காட்டிப் புகழ்பெற விரும்பிப் போர் புரிந்த மன்னர்களும் இருந்தனர். இந்த உண்மையையும் தொல்காப்பியம் மறைக்கவில்லை.

"வஞ்சிதானே முல்லையது புறனே;
எஞ்சா மண்ணசை வேந்தனை, வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே."

வஞ்சித்திணை என்பது முல்லைத்திணை யென்னும் அகத்திணையோடு தொடர்புள்ளது; அடங்காத மண்ணாசைகொண்டு, நாடு பிடிப்பதற்காகப் படையெடுத்து வந்த அரசனை, எதிர்ப்பது; நீதிநெறியைக் கருதும் வேந்தன் வலிந்து படையெடுத்து வந்த மன்னன் அஞ்சும்படி படைதிரட்டிச் சென்று போர் செய்வதாகும்" (தொல், பொருள், புறத்திணை இயல் 6).

இச்சூத்திரம் மண்ணாசைகொண்டு போர் தொடுத்த மன்னர்கள் தமிழகத்தில் இருந்தனர் என்பதற்குச் சான்று.

"தும்பைதானே நெய்தலது புறனே;
மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை அழிக்கும் சிறப்பிற்று என்ப.

தும்பை என்பது நெய்தல் திணை என்னும் அகத்திணையோடு தொடர்புள்ளது; தனது வல்லமையை உலகம் புகழவேண்டும் என்னும் கருத்தைக்கொண்டு வலிந்து போர்செய்ய வந்த அரசனை எதிர்த்துச் சென்று போர் செய்து அழிப்பதாகும். இத்தகைய சிறப்புள்ளதே தும்பைத் திணையாகும்" (தொல், பொ. புறத்திணை 12).

இச்சூத்திரம், தமது வீரத்தை வெளியிடுவதற்காகவே போர் புரிந்த மன்னர்களும் தமிழகத்தில் இருந்தனர் என்ற உண்மையை உரைத்தது.

பண்டைத் தமிழகத்திலே அறநெறியும், மக்கட் பண்பும் நிறைந்திருந்தன. ஆயினும், தனியதிகார வெறி காரணமாகப் பல அரசர்கள் அறநெறியைச் சிதைக்க அஞ்சவில்லை. இதற்கான எடுத்துக்காட்டுக்கள் சிலவற்றைக் காண்போம்.

**அண்ணன் தம்பிச் சண்டை.**

சோழன் நலங்கிள்ளியும், சோழன் நெடுங்கிள்ளியும் ஒரு குலத்தினர்; ஒரு குடியினர்; அண்ணன் தம்பி முறையினர். நலங்

கிள்ளி காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக்கொண்ட சோழ மன்னன். நெடுங்கிள்ளி உறையூரைத் தலைநகராகக்கொண்ட சோழ அரசன். இவர்கள் இருவரும் அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டிருந்தனர். இவர்களில் நலங்கிள்ளிதான் வலிந்து போர் செய்தவனாகக் காணப்படுகின்றான்.

புறநானூற்றில் உள்ள 44, 45 ஆகிய பாடல்கள் இவ்வுண்மையை உரைக்கின்றன. நெடுங்கிள்ளி ஆவூர்க் கோட்டையுள்ளிருந்தபோது நலங்கிள்ளி அக்கோட்டையை முற்றுகையிட்டான். நெடுங்கிள்ளி கோட்டைக் கதவைத் திறக்காமல் உள்ளேயே பதுங்கியிருந்தான். அப்பொழுது கோவூர்கிழார் என்னும் புலவர் நெடுங்கிள்ளியிடம் சென்றார். கோட்டைக் கதவு அடைபட்டிருப்பதனால், கோட்டைக்குள்ளிருக்கும் மக்கள் வறுமையால் வாடுவதை அவனுக்கு எடுத்துக்காட்டினார். 'அறநெறியில் நடப்பதானால் கோட்டைக் கதவைத் திறந்துவிடு. நலங்கிள்ளியிடம் இக்கோட்டை உனது என்று சொல்லிவிடு; வீரனானால் நலங்கிள்ளியை எதிர்த்துப் போர் செய்;' என்று அறிவுரை கூறினார். இச்செய்தியை 44வது பாடலிலே காணலாம்.

மற்றொரு சமயம் நெடுங்கிள்ளி உறையூர்க் கோட்டைக்குள்ளிருந்தபோது, நலங்கிள்ளி அக்கோட்டையை முற்றுகையிட்டான். அப்பொழுதும் நெடுங்கிள்ளி கோட்டைக் கதவைத் திறக்கவில்லை. இப்படியே பல நாட்கள் கழிந்தன. கோட்டைக்குள் வாழ்ந்த மக்கள் வறுமையால் வாடினர். இந்த அண்ணன் தம்பிச் சண்டையால் சோழ நாட்டு மக்கள் அடைந்த துன்பத்திற்கு அளவில்லை. அப்பொழுதும் கோவூர் கிழார் தோன்றி இரண்டு சகோதரர்களையும் சமாதானம் ஆகும்படி செய்தார். இந்த உண்மையை புறநானூற்றின் 45வது பாடல் கூறுகின்றது.

"உன்னுடன் போர் செய்கின்றவன் பனம்பூமாலையைத் தரித்த சேரன் அல்லன்; வேப்பம்பூ மாலையைத் தரித்த பாண்டியனும் அல்லன்; உன்னுடைய மாலையும் ஆத்திப் பூவால் கட்டப்பட்டது; உன்னுடன் எதிர் நின்று போர் செய்கின்றவன் மாலையும் ஆத்திப் பூவால் கட்டப்பட்டது. உங்களில் யார் தோற்றாலும் தோற்பது சோழர் குடிதான்; சோழன் தோற்றான் என்றுதான் சொல்லுவார்கள். போரில் இருவரும் வெற்றியடைவது என்பது இயற்கையன்று. ஆதலால் உங்கள் செய்கை உங்கள் குடிப்பெருமைக்கு ஏற்றது அன்று. நீங்கள் செய்யும் இச்சண்டை உங்கள் போன்ற மன்னர்களுக்குத்தான் மகிழ்ச்சியைத் தரும்".

இவ்வாறு கோவூர்கிழார் இரு மன்னர்களையும் பார்த்துக் கூறினர். பிறகு இருவரும் போரைக் கைவிட்டனர். இச்செய்தி புறநானூற்றின் 45வது செய்யுளில் காணப்படுகின்றது. அச் செய்யுள் கீழ் வருவது,

இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்;
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்;
நின்னகண்ணியும் ஆர்மிடைந் தன்றே; நின்னெடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே;
ஒருவீர் தோற்பினும் தோற்பது உம்குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே அதனல்
குடிப்பொருள் அன்று நும்செய்தி, கொடித்தேர்
நும்மோர் அன்ன வேந்தற்கு
மெய்ம்மலி உவகை செய்யும் இவ்விகலே.

இவ்வாறு ஒரு குடியிலே பிறந்தவர்கள் பகைத்தெழுந்து போர் புரியத் தொடங்கியதற்குக் காரணம் மண்ணாசையைத் தவிர வேறில்லை. தனியதிகார வெறியைத் தவிர வேறில்லை.

மற்றொரு வரலாறு அனைவரும் அறிந்தது. குமணனும், இளங்குமணனும் உடன்பிறந்தவர்கள்; அண்ணன் தம்பிகள். மண்ணாசையும் பொன்னாசையும் இளங்குமணனை ஆட்டி வைத்தன. உடன் பிறந்த உறவுக்கு உலை வைத்தன.

புறநானூற்றில் உள்ள 165வது பாடலும் அதன் அடிக்குறிப்பும் இவ்வுண்மையைத் தெளிவாக விளக்குகின்றன.

பெருந்தலைச் சாத்தனர் என்னும் புலவர் குமணனைத் தேடிச் சென்றார். தேடிச் செல்லும் வழியிலே காட்டிலே குமணனைக் கண்டார். தன் வறுமையை விளக்கிப் பாடினர். உடனே குமணன் தன் கையிலிருந்த வாளைப் புலவர் கரத்திலே நீட்டினன். 'புலவரே! என்னிடம் இப்பொழுது என் உடம்பைத்தவிர வேறொன்றும் இல்லை. என் தம்பி, என் தலையைக் கொண்டு வருவோர்க்குப் பெரும் பரிசு அளிப்பதாக அறிவித்திருக்கின்றான். ஆதலால் என் தலையைக் கொண்டு சென்று பரிசு பெற்று உமது வறுமையை விரட்டியடிமின்' என்று கூறினன். "தன் தலையைக் கொண்டு செல்வதற்காகவே வாளை என் கையில் கொடுத்தான்" என்று அந்த 165வது செய்யுளில் காணப்படுகின்றது.

குமணனுடைய இச்சிறந்த தியாகத் தன்மையைப்பற்றி, இளங்குமணனிடம் பெருந்தலைச் சாத்தனர் இவ்வாறு எடுத்துரைத்தார். இச் செய்யுளின் அடிக்குறிப்பு வருமாறு:—

தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடு
பற்றியிருந்த குமணனைக் கண்டு,
அவன்தன் வாள் கொடுப்பக் கொண்டு

வந்து இளங் குமணற்குக் காட்டிப்
பெருந்தலைச் சாத்தனுர் பாடியது.

இதுவே அச்செய்யுளின் அடிக்குறிப்பு. இதனால் குமணனுடைய ஆட்சியை, அவனுடைய இளைய சகோதரனுகிய இளங்குமணன் வலிந்து கைப்பற்றிக்கொண்டான், குமணன் காட்டில் புகுந்து வருந்தினுன் என்ற செய்தி தெரிகின்றது. மேலே காட்டிய நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி வரலாறு; குமணன், இளங்குமணன் வரலாறு; இரண்டும், அதிகார வெறி அண்ணன் தம்பி உறவையும் அழிக்கும் என்ற உண்மையை உணர்த்தின.

**தந்தை தநயர்கள் சண்டை :**

தந்தை, மகன் என்ற உறவுக்கும் உலை வைக்கும் தன்மை அதிகார வெறிக்கு உண்டு. இதையும் தமிழர் வரலாற்றிலே காணலாம்.

கோப்பெருஞ்சோழன் சிறந்த கொடையாளி; தமிழறிஞன், தமிழ்ப் புலவரைப் போற்றுவோன்; பிசிராந்தையார் என்னும் பெரும் புலவரின் ஆருயிர் நண்பன்; நட்புக்குக் கோப்பெருஞ் சோழனையும், பிசிராந்தையாரையுந்தான் எடுத்துக் காட்டிக் கூறுவர்.

இத்தகைய கோப்பெருஞ்சோழனும், அரசு, பொருள், அதிகாரம் காரணமாகத் தன் பிள்ளைகளுடன் போர் தொடுக்கத் துணிந்தான் என்ற வரலாறு காணப்படுகின்றது. அவன் தன் மக்கள்மேல் போர் செய்யப் புறப்பட்டபோது, புல்லாற்றூர் எயிற்றியனுர் என்னும் புலவர் அவனைத் தடுத்து அறிவுரை கூறினுர். இவ்வரலாறு புறநானூற்றின் 213-வது பாடலில் காணப்படுகின்றது.

"போரிலே வெற்றி பெற்ற புகழுடைய வேந்தனே! வெண் கொற்றக்குடையின் நிழலிலே உலகத்தைக் காக்கும் மன்னனே! இவ்வுலகிலே உன்னுடன் போர் செய்யப் புறப் பட்டவர்கள் யார் என்று எண்ணிப் பார்த்தால் அவர்கள் உன் பகைவர்கள் அல்லர்; இன்னும் ஆராய்ந்து பார்த்தால் நீயும் அவர்களுக்குப் பகைவன் அல்லன். நீ தேவருலகையடைந்த பின் உனது அரசுக்குரியவர்கள் அவர்கள்; உனக்குப் பின் உன் ஆட்சி அவர்களுக்கே உரிமையாகும்,

இது மட்டுமா? இன்னும் சொல்லுகிறேன் கேள். அறியாமையால் முரட்டுத்தனமாகப் போருக்கெழுந்த உன் புதல்வர்கள் போரில் தோற்று மாண்டு விட்டால் அதன் பின் உன் செல்வத்தை யாருக்குத்தான் கொடுப்பாய்; அல்லது நீ உன் பிள்ளைகளால் வெல்லப்படுவாயானுல் உன் பகைவர்கள் மகிழ்ச்சியடைவார்கள்; உனது புகழ் மறையும்; பழிதான் நிலைநிற்கும்.

ஆதலால் போர் செய்வதை விட்டுவிடு. நல்வினையைச் செய். நீ மறுவுலகம் செல்லும்போது விண்ணோர் உன்னை விருந்தாக ஏற்றுக் கொள்ளத்தக்க நற்பணிகளைச் செய்க'' என்ற கருத்தைப் புல்லாற்றூர் எயிற்றியனார் வலியுறுத்தினார்.

இவ்வரலாற்றால், தனி அதிகாரவெறி தந்தையையும் எதிர்க்கச் செய்யும் என்ற உண்மையைக் காணலாம்.

அதிகாரவெறி காரணமாக நடந்த அடாத செயல்கள் பல வற்றை வரலாறுகளிலே படித்திருக்கின்றோம். 'அண்ணனைக் கொன்று தம்பி அரியாசனம் ஏறினான்; தம்பிமார்கள் வெளியி லிருந்தால் தனது ஆட்சிக்கு ஆபத்து என்று கருதி, அண்ணன் அவர்களை சிறையிலிட்டான்; அரசுக்கு ஆசைப்பட்டுத் தந்தையை மகன் கொலை செய்தான்; மகனைத் தந்தை சிறையிலிட்டான்; என்ற கதைகளைப் படித்திருக்கிறோம். ஆகலால் தனியாட்சி உரிமை இருந்த காலத்தில் தமிழ் மன்னர்களிலும் இத்தகைய வர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது வியப்புக்குரியது அன்று. இது இயற்கையேயாகும்.

தனியாட்சிவெறி, அறத்தை அழித்து மறத்தைச் செய் வதற்கும் தூண்டும். இதற்கும் எடுத்துக் காட்டுக்கள் உண்டு. தமிழ் இலக்கியத்திலிருந்து இதற்கு இரண்டு உதாரணங்களை மட்டும் பார்ப்போம்.

**அதிகார வெறி:**

ஒரு சோழமன்னன்; அவன் பெயர் சோழன்குளமுற்றத் துத்துஞ்சியகிள்ளிவளவன் என்பது. அவனுக்கும் மலையமான் திருமுடிக்காரி என்பவனுக்கும் நீண்டநாள் பகை. பலதடவை போர் புரிந்தும் மலையமான்திருமுடிக்காரியைக் கிள்ளிவளவனால் தோல்வியுறச் செய்ய முடியவில்லை. இதனால் காரியின்மேல் வளவன் அடங்காத ஆத்திரங் கொண்டிருந்தான்.

காரி இறந்து விட்டான். அப்பொழுதும் கிள்ளிவளவ னுக்குக் காரியின்மீதுள்ள ஆத்திரம் அடங்கவில்லை. காரியின் குழந்தைகளைக் கொண்டுவந்தான்; காரியின் மீதுள்ள கோபத் தைக் குழந்தைகளின்மேல் காட்டினான். அதிகாரமும் ஆத்திர மும், அவனுடைய அறிவை அடக்கி விட்டன. காரியின் சிறுவர்களை யானைக்காலிலே கொடுத்துக் கொல்லத் தொடங்கி னான். அப்பொழுது கோவூர்கிழார் என்னும் புலவர் வந்தார்; கிள்ளிவளவனுடைய கீழ்மைச் செயலைத் தடுத்தார்; அவனுக்கு அறிவுரை கூறினார். இந்த நிகழ்ச்சியைப் புறநானூற்றின் 46-வது செய்யுளிலே காணலாம். அச்செய்யுளும் அதன் பொருளும் கீழ்வருவன. (தொடரும்)

# *. தஞ்சாவூர் இராச ராசேச்சரக் கல்வெட்டு வரலாறு.

*வித்துவான், வை சுந்தரேச வாண்டையார்,*
ஆராய்ச்சியாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,

## தஞ்சாவூரின் தொன்மை :—

தஞ்சாவூர் ஜில்லாவில் தஞ்சாவூர் என்னும் பெயருள்ள ஊர்கள் இரண்டு இருக்கின்றன. அவைகளுள் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு மருகல் நாட்டுத் தஞ்சாவூர் என்பது ஒன்று. பாண்டி குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் என்பது மற்றொன்று. இவைகளுள் முன்னது அறுபான்மும்மை நாயன் மார்களில் ஒருவராகிய செருத்துணை நாயனர் பிறந்த பதி. அது நன்னிலந் தாலூகாவில் திருமருகலுக்கு அருகில் உள்ளது. பின்னதுதான் இராச ராசேச்சரம் நிலைபெற்றுள்ள ஊர். இத்தஞ்சாவூர் தேவார வைப்புத் தலங்களுள் ஒன்ருகும். இதை அப்பர் பெருமான் திருவீழி மிழலைத் திருத் தாண்டகம் எட்டாம் பாசுரத்தில் "**தஞ்சைத் தளிக் குளத்தார்**" என்று வைத்துப் பாடியுள்ளனர். திருஞானசம்பந்த அடிகளார் திருக்ஷேத்திரக்கோவையில் "காடொன்பதுங் **குள மூன்றுங்** களமஞ்சும் பாடி நான்கும்" என வைத்துப் பாடிய மூன்று குளங்களில் இது ஒன்ருகும். (குளம் மூன்ருவன :— தளிக்குளம், கடிக்குளம், பாற்குளம் என்பன). இத்தஞ்சைத் தளிக்குளம் தஞ்சை இராச ராசேச்சரம் நிலைபெற்றுள்ள கோயிலுக்கு அண்மையில் உள்ள சிவகங்கைக் குளத்தில் இருக்கின்றது. அதில் தண்ணீர் குறைந்துள்ள காலங்களில் சிவலிங்கம், நந்தி இவைகளை இன்றும் காணலாம். எனவே தஞ்சைத் தளிக்குளத்தை அப்பர் பெருமான் பாடியிருப்பதால் அவரது காலமாகிய கி. பி ஏழாம் நூற்ருண்டுக்கு முற்பட்ட பழமையும் பெருமையும் வாய்ந்தது இத்தஞ்சாவூர். இத்தஞ்சாவூர் அப்பர் பெருமான் காலத்திலேயே **தஞ்சை** என்று மரூஉ மொழியாக வந்துள்ளதும் ஈண்டு அறிதற்குரியது-

---

* See the Annual Reports on South Indian Epigraphy for the years

| | | |
|---|---|---|
| 1888 | Numbers | 65—114 |
| 1890 | ,, | 52—53 |
| 1891 | ,, | 35—43 |
| 1893 | ,, | 55—58 |
| 1897 | ,, | 20—41 |
| 1911 | ,, | 274—275 |
| 1918 | ,, | 552 |
| 1924 | ,, | 414—425 |
| 1925 | ,, | 349—351 |
| 1928 | ,, | 111 |
| 1933 | ,, | 202 |

and the South Indian Inscriptions Volumes

| | | | |
|---|---|---|---|
| | II | Nos. | 1—56 |
| ,, | II | ,, | 65 & 66 |
| ,, | II | ,, | 57—64 & 71, 94. |
| ,, | II | ,, | 67—70 |
| ,, | II | ,, | 4, 32, 63, 64 and 79—97. |

## தஞ்சையைப்பற்றிய பிறகுறிப்பு :—

பிற்காலச் சோழ மன்னர்களில் முதல்வனுகிய விசயாலய சோழன் தஞ்சாவூரைப் பிடித்துக்கொண்டு, அதைத் தலைநகராக்கிக் கொண்டான். இச்செய்தி, திருவாலங்காட்டுச் செப்பேட்டிலும் (S. I. I. Vol. III No. 205) தென்னுர்க்காடு ஜில்லா, திருக்கோவலூர்த் தாலூகா வீரசோழபுரத்துக் கல்வெட்டிலும் குறிக்கப்பெற்றுள்ளது. இத் தஞ்சையே விசயாலயன் காலம் முதல், முதலாம் இராசராசன் காலம் முடிய சோழர்களுக்குத் தலை நகராய் விளங்கியிருந்தது. "உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் தஞ்சாவூர்க் கோயிலினுள்ளால் இருமடி சோழனின் கீழைத் திருமஞ்சனசாலை தானஞ் செய்தருளாவிருந்து" என்னும் கல்வெட்டுப் பகுதி, தஞ்சாவூரில் சோழர்களுக்கு அரண்மனை இருந்தது என்பதற்கு ஆதாரமாகும்.

## இராச ராசேச்சரம் என்ற தொடர்க்குப் பொருள்:—

இத்தொடர் இராசராச சோழனுல் கட்டப்பெற்ற கோயில் என்று பொருள்படும். ஈச்சரம்—கோயில். இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகக்ள் எல்லாம் ராஜராஜீஸ்வரம் என்றே இக்கோயிலைக் குறிப்பிடுகின்றன. இலக்கண விதிப்படி அது தவறுடையதாகும். ராஜராஜேஸ்வரம் என்பதே திருத்தமுடையதாகும்.

## இராசராச சோழன் தஞ்சைத் தளிக்குளமுடையார் கோயிலை இராச ராசேச்சரம் என்னும் பெயரால் கட்டினுறு அல்லது இது வேறு கோயிலா ?

இராசராசசோழன் தஞ்சைத் தளிக்குளமுடையார் கோயிலைத் தன் பெயரால் இராசராசேச்சரம் என்று கட்டினுன் அல்லன். ஒருவர் தம் பெயரால் பழைய கோயிலைக் கட்டினுலும் அங்குள்ள இறைவன் பெயரை மாற்றிவிடுவது பண்டைய வழக்கமன்று. உதாரணமாகச் செம்பியன் மாதேவியார் திருநல்லம் கோயிலைத் தம் கணவர் பெயரால் கண்டராதித்தன் என்று கட்டினுலும், அக்கோயில் கல்வெட்டுக்கள் அனைத்தும் அவ்விறைவனைத் திருநல்லமுடையார் என்னும் பெயராலேயே குறிப்பிடுகின்றன. அம்முறைக்கு ஏற்ப இராசராசேச்சரத்து எழுந்தருளியிருக்கும் இறைவரை, இக்கோயில் கல்வெட்டுக்கள் இராசராசேச்சரமுடையார், இராசராசேச்சரத்து இனிது எழுந்தருளியுள்ள பரமசுவாமி என்னும் பெயர்களால் குறிப்பிடுகின்றனவேயன்றி ஒரு கல்வெட்டிலேனும் தஞ்சைத் தளிக்குளமுடையார் என்று குறிக்கப்பெறவில்லை. எனவே இது தஞ்சைத் தளிக்குள முடையார்க்குக் கட்டப்பெற்ற கோயில் அன்று.

முதலாம் இராசராசசோழன் தன் தலைநகரில் தன் பெயரால் கோயில் ஒன்று நிலவ வேண்டுமென்று எழுந்த வேட்கையால் கட்டப்பெற்ற வேறு கோயிலே இந்த இராசராசேச்சரம் ஆகும். ஆயின் இவ்வளவு பெரிய கோயிலை பழஞ் சிறப்புடைமையில்லாது முதலாம் இராசராசசோழன் கட்டியிருக்கமாட்டான் எனின் இவன் மகன் கங்கைகொண்ட சோழபுரத்தில் இராசராசேச்சரத்தின்

அமைப்பை ஒத்த பெருங் கோயிலைக் கட்டியது அதன் பழஞ் சிறப்பை எண்ணியே ஆதல்வேண்டுமே; அங்ஙனம் பழஞ் சிறப்புக் கூறுதற்கு ஆதாரமில்லையே.

**இராசராசேச்சரம் நிலைபெற்றுள்ள இடம் :—**

"பாண்டி குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீ ராஜராஜீஸ்வர முடையார்க்கு, நாம் குடுத்தனவும், அக்கன் குடுத்தனவும், நம் பெண்டுகள் குடுத்தனவும் மற்றும் குடுத்தார் குடுத்தனவும் ஸ்ரீ விமானத்திலே கல்லிலே வெட்டுக என்று திருவாய் மொழிஞ்சருள வெட்டின" என்னும் முதலாம் இராசராசசோழனின் ஆட்சியாண்டு 26, நாள் இருபதில் வெட்டப்பெற்ற கல்வெட்டுப் பகுதி, தஞ்சை இராசராசேச்சரம் நிலைபெற்றுள்ள இடம் பாண்டி குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூரில் அமைந்துள்ளதைப் புலப்படுத்தும். பாண்டிகுலாசனி என்பது முதலாம் இராசராச சோழனுடைய விருதுப் பெயர்களில் ஒன்று. இதற்குப் பாண்டியர் குலத்துக்கு இடியை ஒத்தவன் என்பது பொருள். இப்பெயரே இவ்வளநாட்டுக்கு வைக்கப்பெற்றதாகும். இப்பெயரே பிற்பட்ட காலத்தில் பாண்டிகுலபதி வளநாடு என்று வழங்கப்பெற்றுள்ளது.

இப்பாண்டி குலாசனி வளநாடு :— ஆர்க்காட்டுக் கூற்றம், இடையாற்று நாடு, எயிநாடு, எறையூர் நாடு, கிளியூர் நாடு, கீழ் செங்கிளி நாடு, சுத்தமல்லி வளநாடு, தஞ்சாவூர்க் கூற்றம், பனங்காடு நாடு, புறக்கிளி நாடு, மீசெங்கிளி நாடு, மீய்வாரி நாடு, வடகவிரை நாடு, வட சிறுவாயில் நாடு, விளாநாடு முதலான பதினேழு பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்றிருந்தது.

தஞ்சாவூர்க் கூற்றம் :- தஞ்சாவூர், கருந்திட்டைக்குடி முதலான ஊர்கள் இக் கூற்றத்தில் அடங்கியிருந்த ஊர்களிற் சிலவென்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. கூற்றம் என்பது இருநாடுகளுக்கு இடைப்பட்ட சிறுபிரிவாகும்.

**இராச ராசேச்சரம் கட்டி முடிவுபெற்றகாலம் :—**

முதலாம் இராசராச சோழன் அவனது ஆட்சியாண்டு இருபத்தைந்து, நாள் இருநூற்று எழுபத்தைந்தில் ஸ்ரீ ராச ராசேச்சரமுடையார் ஸ்ரீ விமானத்துச் செம்பின் ஸ்தூபித் தறியில் வைக்கச் செப்புக்குடம் ஒன்றைக் கொடுத்த செய்தியை, அவன் கல்வெட்டுப் பகுதி (S. I. I. vol. II, part I, page 3) உணர்த்துகின்றது. எனவே கோயில் கட்டி முடிவு பெற்ற காலம் (கி. பி. 985 + 25) கி. பி. 1010 அதாவது இற்றைக்கு 947 ஆண்டுகளுக்கு முன்பு ஆகும்.

**இராச ராசேச்சரத்து, கர்ப்ப இல்லில் எழுந்தருளியிருக்கும் இறைவரின் பெயர் :—**

இக்கோயில் கர்ப்ப இல்லில் எழுந்தருளியிருக்கும் இறைவர், சோழ மன்னர்களின் கல்வெட்டுக்களில், **இராச இராசேச்சரமுடையார், இராச ராசேச் சரமுடைய பரமசுவாமி** எனக்

குறிக்கப்பெற்றுள்ளனர். மல்லப்ப நாயக்கர் கல்வெட்டில் "தஞ்சாவூர் பெரிய உடைய நாயனுர்" என்னும் பெயர் காணப்படுகிறது. இதுவே இக்காலம் தஞ்சைப்பெருவுடையார் என்று வழங்கப் பெறுகின்றது.

இக்கோயிலில் முதலாம் இராசராச சோழன் எழுந்தருளி வித்தனவும், கொடுத்தனவுமாகிய வேறு திருமேனிகள் :—

இக்கோயிலில் முதலாம் இராச ராசசோழன், தட்சிண மேரு விடங்கர், மகாமேருவிடங்கர், சண்டேஸ்வரபிரசாததேவர், இவர் பிராட்டியார் உமா பரமேஸ்வரியார், சண்டேஸ்வரரின் தந்தையார் விழுத்து கிடந்தாராய் உள்ளவர், பிரசாதம் பெறுகின்றுராகக் கனமாகச் செய்த சண்டேஸ்வரர், மகாதேவர், பஞ்சதேக மூர்த்திகள், முதலான வேறு திருமேனிகளை எழுந்தருளிவித்துள்ளான். ஆட வல்லான் என்னும் கல்லால் எண்ணூற்று இருபத்தொன்பது கழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடி நிறையுள்ள ஸ்ரீ பலி எழுந் தருளும் பொன்னின் கொள்கை தேவர் ஒருவரையும் ; பாதாதி கேசாந்தம் மூவிரலே மூன்று தோரை உயரமும், நான்கு திருக்கை களிலும் பிடித்தருளிய சூலமும், கபாலமும், பாசமும், தமருகமும்; வெள்ளியின் பாதபீடமும் உள்பட நிறை எழுபத்திரு கழஞ்சரை யுள்ள பொன்னின் க்ஷேத்திரபால தேவர் ஒருவரையும் கொடுத் துள்ளான்.

**தட்சிணமேரு விடங்கர் :—**

விடங்கன் என்னும் சொல், காமுகன், வம்பளப்பவன், நல்லுருவ முடையவன், உளியினுல் செதுக்கப்படாது தானே உண்டான சுயம்பு மூர்த்தி, என்னும் பல பொருள் தரும்.

கல்வெட்டுத் துறையாளர், இராச ராசேச்சரக் கர்ப்ப இல்லில் எழுந்தருளியிருக்கும் இறைவர் தட்சிண மேருவிடங்கர் (அ) ஆடவல்லான் என்னும் பெயரால் அழைக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளனர். (The chief image of the central shrine was called Dakshinameru Vidangan or Adavallan (South Indian Inscription Vol. II part v Introduction page 29) அது பொருந்துவது ஆகாது. கர்ப்ப இல்லில் எழுந் தருளியிருக்கும் இறைவர் இராச ராசேச்சரமுடையார், இராசராசேச் சரத்துப் பரமசுவாமி என்னும் பெயர்களால் குறிக்கப் பெற்றுள் ளனர். இராசராசேச்சரமுடையார் வேறு, ஆடவல்லார் தட்சிண மேருவிடங்கர் வேறு, என்பதனை "ஸ்ரீ காரியஞ் செய்கின்ற பொய்கை நாடுகிழவன் ஆதித்தன் சூரியனுன தென்னவன்மூவேந்த வேளான் யாண்டு 29 வரை உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உடை யார்க்கும், தக்ஷிணமேரு விடங்கர்க்கும் தூபத்தொடு காட் டும் தீபத்துக்கும் கற்பூரத் திரியிட்டு எரிய வைத்த பொலிசை காசும்" என்னும் கல்வெட்டுப் பகுதி இனிது விளக்குகின்றது.

இராசராசேச்சர விமானத்துக்கு தட்சிணமேரு என்ற பெயர் உண்டென்பது சில ஆராய்ச்சியாளரின் கொள்கை. அதுவும்

பொருந்துவது அன்று. இராசராசன் கல்வெட்டில் விமானத்தைப் பற்றிக் குறிக்க வந்தவிடத்து அதை ஸ்ரீ விமானம் என்று குறிக்கப் பட்டுள்ளதே ஒழிய அதற்குத் தட்சிணமேரு என்னும் பெயர் குறிக்கப்படவில்லை. இராசராசேச்சரக் கல்வெட்டுக்களில் ஆட வல்லார் தட்சிணமேருவிடங்கர், மகாமேரு விடங்கர், தஞ்சை விடங் கர் என்னும் மூன்று திருமேனிகளைப்பற்றிக் குறிக்கப்பெற்றுள்ளன. இவைகளுள் ஆடவல்லார் தட்சிணமேரு விடங்கர் என்பது சிதம்பரம் நடராசப் பெருமானைக் குறிக்கும் பெயராகும். சோழமன்னர் சிதம்பரம் நடராசப் பெருமானையே தங்கள் குலதெய்வமாகக் கொண்டவர்கள் ஆதலின், முதலாம் இராசராசசோழன் தான் கட்டிய கோயிலில், மகாமேருவிடங்கரை எழுந்தருளுவித்ததுபோல, சிதம்பரம் நடராசப்பெருமானையும் எழுந்தருளுவித்தல் இயல்பே. கோயில் பதிகம் பாடிய திருமாளிகைத்தேவர் 'விடங்கொள் கண்டத் தெம் விடங்கனே யுன்னைத் தொண்டனேன் விரும்புமா விரும்பே' (பண்—பஞ்சமம். பாடல் 10) என்று விடங்கர் என்னும் சொல்லால் நடராசப் பெருமானைக் குறித்துள்ளனர். சிதம்பரம் பேரம்பலத்திற்கு மேரு என்னும் பெயர் உண்டென்பதைச் சேக்கிழார் சுவாமிகள்,

"பெருமதில் சிறந்த செம்பொன் மாளிகை மின்பிறங்கு
பேரம்பலம் மேரு
வருமுறை வலங்கொண்டிறைஞ்சிய பின்னர் வணங்கிய
மகிழ்வொடும் புகுந்தார்."

என்று தடுத்தாட்கொண்ட புராணத்தில் கூறியுள்ளார்கள்' ஜம்புத்தீவின் வடக்கே தங்கமயம் பொருந்திய மேருமலை இருப்பது போல, தென்பால் சிதம்பரம் சிற்றம்பலமும் பொன்வேயப் பெற்ற பின்னர் அதற்குத் தக்ஷிணமேரு என்னும் பெயரை ஆன்றோர்கள் வைத்திருக்கலாமன்றே. அது காரணமாக ஆடவல்லார் தக்ஷிண மேருவிடங்கர் என்பது நடராசப் பெருமானைக் குறிக்கும் தொட ராகும். சிதம்பரம் நடராசப்பெருமான் திருக்கோயில் கல்வெட்டில், முதலாம் இராசராசன் காலத்துக்கு முற்பட்ட கல்வெட்டுக்கள் இல்லை. முதலாம் இராசராசசோழன் காலத்துக் கல்வெட்டிலும், அவனுடைய மெய்க்கீர்த்திப் பகுதி அடங்கிய சிதைந்துபோன துண்டுக் கல்வெட்டுக்கள் பிராகாரத்தில் கிடக்கின்றன. இதைக் கல்வெட்டுத் துறையாளரும் ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டுள் ளனர். எனவே, சிற்றம்பலத்திற்குத் தட்சிணமேரு என்னும் பெயர் கல்வெட்டுக்களில் காணப்பெருமைக்கு இதுவே காரண மாகும். அரசியலார் எடுத்துள்ள கல்வெட்டுக்களின் மூலங்கள் அனைத்தும் வெளிவந்தில. வெளிவரின் ஆதாரம் கிடைக்கலாம். எனவே இதுகாறும் கூறியவற்றால், தஞ்சைக் கர்ப்பஇல்லில் எழுந் தருளியிருக்கும் இறைவர்க்கு ஆடவல்லார் தட்சிணமேரு என்னும் பெயர் இல்லை என்பதும், தஞ்சைக் கோயில் விமானத்திற்குத் தட்சிணமேரு என்ற பெயர் உண்டென்பது பொருந்துவது அன்று என்பதும் பெற்றும்.

(தொடரும்)

# இலக்கண நூல்களில் காணப்பெறும் பிழை

(திரு—அடிகளாசிரியர், புலவர் கல்லூரி, கரந்தை)

ஒரு மொழியைப் பிழையின்றி வழங்கச் செய்வதற்குக் கருவியா யிருப்பது அதன் இலக்கண நூல்களாம். அவ் விலக்கண நூல்களே பிழைபட வழங்குமாயின் அந் நூல்களால் அம்மொழி திருந்துவது எப்படி? எடுத்துக் காட்டாகச் சிலவற்றை நோக்குவோம்.

அணியிலக்கணத்தை உணர்த்துகின்ற **தண்டியலங்காரத்தில்** ஏது அணியைக் கூறுமிடத்து,

"யாதன் றிறத்தினும் இதனினிது விளைந்ததென்று
ஏதுவிதந் துரைப்பது ஏது; அதுதான்
காரகம் ஞாபகம் எனஇரு திறப்படும்."

"முதல்வனும் பொருளும் கருமமும் கருவியும்
ஏற்பதும் நீக்கமும் எனவிவை காரகம்."

என்னும் நூற்பாக்களும், "யாதானும் ஒரு பொருட்டிறத்து இதனல் இது நிகழ்ந்ததென்று காரணம் விதந்து சொல்வது ஏதுவென்னும் அலங்காரமாம்; அது காரக ஏதுவென்றும், ஞாபக ஏதுவென்றும் இரண்டு கூறுபடும்; கருத்தா முதல் நீக்கநிலை ஈருகச் சொல்லப் பட்ட இவையாறும் காரணமாகத் தோன்றுவது காரக ஏதுவாம்." என்று அதன் **பழைய உரைகளும்** காணப்படுகின்றன.

இவற்றைப் படித்துப் பார்த்தால் பழைய உரையிலே பிழை யிருப்பதாகத் தோன்றவில்லை. நூற்பாவைப் பல காலமாகப் பிழையாய் எழுதி வருகின்றனர்; அப்பிழை களையப் பெருமையால் நூற்பாவிற்குத் தெளிவாய்ப் பொருள் விளங்கவில்லை என்பது மட்டும் தெரிகின்றது. அப் பிழையை ஆராய்வோம்.

## ஆறு காரகம்

முதல் வேற்றுமையும், இரண்டாம் வேற்றுமையும், மூன்றும் வேற்றுமையும், நான்காம் வேற்றுமையும், ஐந்தாம் வேற்றுமையும், ஏழாம் வேற்றுமையும் வினையால் முடிந்தால் காரகம் என்று சொல்லப் பெறும். அக்காரகங்கள் ஆறுகும் என்பனவற்றை,

"விளிகுறை இரண்டையும் விட்டவேற் றுமைகள்
வினையான் முடியிற் காரகம் எனப்பெறும்"

என்னும் **இலக்கணக் கொத்து** நூற்பாவாலும்,

"மாற்றும் கருத்தா கருமம் கரணம் அவதிகொள்வோன்
சாற்றுந் தொழிற்கிடம் என்றறு காரகம் தாமுளவே"

என்னும் **பிரயோக விவேகக்** காரிகையாலும் நாம் அறிந்து கொள்ளுதல் கூடும்.

## பிழையான பாடம்

ஆனால், தண்டியலங்காரத்தில் காரகத்தின் வகையைச் சொல்லுகின்ற நூற்பா

"முதல்வனும் பொருளும் கருமமும் கருவியும்
ஏற்பதும் நீக்கமும் எனுமிவை காரகம்"

என்று காணப்படுகின்றது. இதனுள் 'முதல்வன், என்றது முதல் வேற்றுமைக் காரகமாயிற்று ; 'பொருள், என்றது செயப்படு பொருளாகிய இரண்டாம் வேற்றுமைக் காரகமாயிற்று ; 'கருவி, என்றது மூன்றும் வேற்றுமைக் காரகமாயிற்று ; 'ஏற்பது, என்றது நான்காம் வேற்றுமைக் காரகமாயிற்று ; 'நீக்கம், என்றது ஐந்தாம் வேற்றுமைக் காரகமாயிற்று ; இனி நமக்கு வேண்டுவது ஏழாம் வேற்றுமைக் காரகமாகும் ; அதனை உணர்த்தும் சொல் நூற்பாவில் காணப்பெறவில்லை ; இனி நூற்பாவில் எஞ்சி நிற்பது 'கருமம் என்ற சொல்லாகும் ; 'கருமம்' என்ற சொல் செயப்படுபொருளை யன்றோ உணர்த்தும் ! 'கருமம்' என்ற சொல் செயப்படுபொருளை உணர்த்துமாயின், முன்னர் நிற்கும் 'பொருள், என்ற சொல் எப்பொருளை உணர்த்தும் ? செயப்படுபொருளை உணர்த்து வதற்குப் 'பொருள்' 'கருவி' என்னும் இரண்டு சொல் எதற்கு? என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன. எனவே இந் நூற்பாவுள் 'கருமம்' என்றதை நீக்கிவிட்டு 'இடம்' என்றதை அமைத்துக் கொள்வதைத் தவிர்த்து நமக்கு வேறு வழியில்லை.

இந் நூற்பா,

"முதல்வனும் பொருளும் கருவியும் ஏற்பதும்
நீக்கமும் இடமும் எனஇவை காரகம்"

என்றிருக்க வேண்டும் என்று தெரிகின்றது. இலக்கண விளக்க ஆசிரியரும்,

## இலக்கண விளக்க ஆசிரியர் கூற்று

"யாதன் றிறத்தினும் இதனினிது விளைந்ததென்
றேதுவிதந் துரைப்பது ஏது அதுதான்
காரகம் ஞாபகம் எனவிரண் டவற்றுள்
முதல்வனும் கருமமும் கருவியும் ஏற்பதும்
நீக்கமும் இடமும் எனுமிவை காரகம்
அவையல பிறவென் றறிவது ஞாபகம்"

(இலக்கண விளக்கம் பொ-285)

என்று இடத்தை ஈற்றில் வைத்தே நூற்பாச் செய்துள்ளார். இவர் செய்த நூற்பாவுள் ஆறு காரகங்களும் முறையாக குறிக்கப் பெற்றுள்ளன.

## மாறனலங்கார நூலார் கூற்று

ஆனால், தண்டியலங்காரத்தைப் பெரும்பாலும் பின்பற்றிய **மாறனலங்கார நூலாசிரியர்** காரக ஏதுவைக் கூறும்பொழுது

" அவற்றுள்
முதலது முதல்வனும் கருவியும் கருமமும்
காலமும் இடனும் கண்ணிய நெறித்தாப்
போக்கறு பொருளொடும் புகலிரு மூன்றினும்
ஆக்கமும் அழிவுமென் றமர்தரு விரித்தே."

என்று நூற்பாச் செய்துள்ளார். அவர் கருத்துப்படி காரக ஏதுவானது முதல்வன், கருவி, கருமம், காலம், இடம், பொருள் என்னும் ஆறு பொருளிலும் ஆக்கம், அழிவு என்ற இரண்டு பற்றி வரும் என்று தெரிகிறது. அவர் கூறியவற்றுள் 'முதல்வன்' முதல் வேற்றுமைக் காரகமாகும்; 'கருவி' மூன்றும் வேற்றுமைக் காரகமாகும்; 'கருமம்' இரண்டாம் வேற்றுமைக் காரகமாகும்; 'காலமும் இடமும்' ஏழாம் வேற்றுமைக் காரகமாகும்; ஈற்றிலே கூறிய 'பொருள்' செயப்படுபொருளாயின் இரண்டாம் வேற்றுமைக் காரகமாகும்; நான்காம் வேற்றுமைக் காரகமும் ஐந்தாம் வேற்றுமைக் காரகமும் இந் நூற்பாவுள் கூறப் பெறவில்லை. எந்த ஆதாரத்தால் இவர் இங்ஙனம் நூற்பா செய்தாரென்பது இப்பொழுது விளங்கவில்லை.

## குமாரசாமிப் புலவர் கூற்று

வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்ல பெரும் புலவராகிய யாழ்ப்பாணம் **அ. குமாரசாமிப் புலவரவர்கள்** தாம் எழுதிய **தண்டியலங்காரப் புத்துரையுள்** பிழைபட்ட தண்டியலங்கார நூற்பாவை அப்படியே வைத்துக்கொண்டு மாறனலங்கார நூற்பாவின் கருத்தை அதனுள் கொண்டுவந்து பெய்து, குழப்பிவிட்டுச் சென்றனர். அவர், '**முதல்வனும்** பொருளும், என்னும் **தண்டியலங்கார நூற்பாவிற்குக்** கீழ்வருமாறு உரை வகுத்துள்ளார்.

" முதல்வனும் பொருளும் கருமமும் கருவியுமாகிய
இவை ஏற்பதும் நீக்கமும் என இருவகையாகி
வருவன காரக ஏதுக்களாம்."

என்பது அவ்வுரையாகும். இவ்வுரையுள் ஆறு காரகங்களும் கூறப் பெறவில்லை; நான்காம் வேற்றுமையையும் ஐந்தாம் வேற்றுமையையும் குறிக்கின்ற 'ஏற்பது' நீக்கம்' என்பனவற்றிற்கு 'ஆக்கம்' 'அழிவு' என்று உரை கூறப் பெற்றுள்ளது. அந்நூற்பாவில் வந்துள்ள எண்ணும்மைகளையும் அவர் நோக்கிலர்.

## தொல்காப்பியம் எழுத்ததிகாரம்
## இளம்பூரணர் உரை.

இது நிற்க, ஏனைய இலக்கண நூல்களில் காணப்பெறும் பிழைகளில் சிலவற்றைப் பார்ப்போம். **தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிரப்** பகுதியான

" அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரிறபத் தெரிந்து

என்னும் இவ்வடிகளுக்கு " அவ்வவையுள்ளார்க் கேற்பத் தெரிந்தே நின்ற மெய் சொல்லும் நாவினையுடைய நான்கு வேதத்தினையும் முற்ற உணர்ந்த அதங்கோடு என்கின்ற ஊரின் ஆசானுக்குக் கடா அறத் தெரிந்து கூறி" என்று இளம்பூரண அச்சுப் புத்தகங்கள் எல்லாவற்றினும் உரை காணப்படுகின்றது. இப்பகுதி படிப்பவர்க்குச் சிறிதும் விளங்குவதே யில்லை. ஆனால், எனக்கு ஞானியார் சுவாமிகள் மடாலயத்திலிருந்து கிடைத்த இளம்பூரண ஏட்டுச் சுவடி யொன்றில் "அவ்வவையுள் யார்க்கு அரில் தபத் தெரிந்தெனின் :— அறமே சொல்லும் நாவினையுடைய நான்கு வேதத்தினையும் முற்ற அறிந்த அதங்கோடென்கின்ற ஊரில் ஆசானுக்குக் கடாவறத் தெரிந்து கூறி" என்று உரை காணப்படுகின்றது. எழுத்ததிகார இளம்பூரண உரையுள் இவ்வாறு பல பிழைகள் காணப்படுகின்றன.

## தொல்காப்பியம் சொல்லதிகாரம்

## சேனவரையர் உரை.

தொல்காப்பியம் சொல்லதிகாரம் 295 ஆம் நூற்பாவின் சேனவரையர் உரையுள் ஓகாரம் எண்ணுப் பொருளில் வந்ததற்கு எடுத்துக் காட்டாக

" கலக்கொண்டேன் கள்ளென்கோ
காழ்கொற்றன் சூடென்கோ "

என்னும் பாடற்பகுதி காணப்பெறுகின்றது. இவ்வடிகளுக்குப் பொருள் ஒன்றும் விளங்குவதில்லை. இவ்வடிகள் யாப்பருங்கல விருத்தியுரையுள்

" கலம்கொண்டன கள்ளென்கோ
காழ்கோத்தன சூட்டென்கோ
நெய்யணிந்த வறையென்கோ
குய்கொண்ட துவையென்கோ."

என்று காணப்பெறுகின்றன. இங்ஙனம் எத்தனையோ பிழைகள் இலக்கண நூல்களில் காணப்பெறுகின்றன. இவற்றைக் களைவதாயின் பல ஏட்டுச் சுவடிகளைத் தேடி ஒப்புமை நோக்கியும் வெவ்வேறு இலக்கண நூல்களையும் பல பழைய உரைகளையும் படித்தும் ஆராய்ந்தால் களைய முடியும். இத்தகைய முயற்சியில் சென்னைப் பல்கலைக் கழகத்தினரும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தினரும் அறிஞரை இயக்கிவிடுவது நன்று என்று கருதுகின்றேன்.

தமிழ் வாழ்க.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்

# நாற்பத்தாரும் ஆண்டு நிறைவு விழாத்தலைவர்.



சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்,

சொல்லின் செல்வர்,

**டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை,** பி. ஏ., பி. எல்., டி. லிட்.